பல மதங்களுள் சிநேக பாவம் உண்டாக வேண்டிய ஒரு சபை ஆலகபாத்தில் ... ... ௧௩௩.
பக்ஷிகளின் நாசம் ... ... ௧௬௩.
ப[illegible] ராஜ்ஜியத்தின் புத்தகசாலைகள் ... ௨௩௫.
பரோதி நதியின் வைத்தியசாலைப்படகு ... ... ௨௭௮.
பலமதங்களின் கூட்டுறவு ... ... ௩௭௬.
பங்களூரில் ஸம்ஸ்கிருத வித்தியாசாலை பிரதிஷ்டை ௩௭௭.
பலஜாதிகளின் காங்கிரஸ் சபை ... ௩௭௮.
பருத்திக்கொட்டை: மனிதன் உணவு ... ௪௧௪.
பிரஹ்மஞான சங்கம், மதுரை. மிஸ்கிரைஸ்டி முதலியார் உபந்நியாசங்கள். ... ௨௩௮.
பிரஹ்மஞான கிளைச்சங்கம், சிவகங்கை. ... ௨௭௭.
பிராணயாமமும் ஜலதோஷமும். ... ௩௦௧.
பிரஹ்மஞான கிளைச்சங்கம் ... ... ௩௭௩.
பிரஹ்மஞான மடம். ... ... ௩௭௮.
பிரஹ்மஞான கிளைச்சங்கம், கும்பகோணம். ... ௩௭௧.
பெரியகுளம்பிரஹ்மஞான சங்கக்கூட்டம். ௮௧, ௯௧, ௯௨, ௯௩, ௯௪.
பௌத்தமத விஷயம். ... ௧௯௮.
மதுரை பிரஹ்மஞான கிளைச்சபை வெண்டாமரை நாள். ௫௨௰.
மாக்கினல் ரஸ்தா. ... ... ௧௬௩.
மதுரை ஸ்ரீ மீனாக்ஷி வித்தியாசாலையின் வருஷோத்ஸவம். ௨௪௦.
மஹிமைதங்கிய ஜார்ஜ் சக்கரவர்த்தி அவர்களின் மகுடாபிஷேகம். ... ... ௪௧௪.
மின்மினிப்பூச்சியினின்று நாம் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயம். ... ... ௧௯௭.
மைசூர் கைம்பெண் மடம். ... ௧௬௪.
வால் நக்ஷத்திரங்கள். ... ... ௯௪, ௯௫.
வால் நக்ஷத்திரம். ... ... ௩௨௦.
வித்யாதர்ம பரிபாலன ஸபை ... ... ௩௨௬.
வித்யாதர்மம்—எட்டியாபுரம் ஜமீன்தார். ... ௧௬௪.
வியாதியை உண்டுபண்ணும் விஷக்கிருமிகளை அழிக்கும் ஓர் அற்புத விளக்கு. ... ௧௯௬.

ஸ்ரீ வெங்கட்டரமண வைத்தியசாலையும் ஆயுர்வேத பாடசாலையும். ... ௧௩௧.

வேதாந்த சாஸ்திரத்தில் பயின்ற ஒரு பெண்மணி. ௧௬௩.

வைதிக முறையான நாவா யாத்திரை. ௨௩௯.

ஜப்பான் தேசத்தில் யோக்கையாமா என்னும்பட்டணத்தில்திவ்யதிருஷ்டிபெற்ற 16வயதுள்ளஒருசிறுவன் ௪௧௩.

ஜனக்கணக்கு ... ௪௧௪.

ஜாம்கந்தியில் வித்தியாசாலை. ௨௩௬.

ஹிந்து வானவன் ஆங்கிலப் பெண்ணை வேதக்கிரியையுடன் மணம்புரிந்தது ... ௯௮.

சூரியன்: அதன் ஸ்தூல கவசங்கள் முதலியன—ப. நா. ௧௨௫.

சூரிய சம்பிரதாயம்: ஒரு பிரஹ்மாண்டம். வி. வெங்குஸ்வாமி அய்யர். ௨௯௬.

சூக்ஷ்ம சரீரத்தின்கண்ணுள்ள சக்கரங்கள். (C. W. L.) ப. நா. ௩௨௬.

சைவம்—வைதிக—தெ. கிருஷ்ணஸ்வாமி. ௧௧௪.

சைவம்—ஆகம—என். பிச்சைபிள்ளை. ௧௭௦.

தன்னைமறந்தால் தலைவனைக் காணலாம்—ப. நா. ௬௫.

தர்ம சத்திரங்கள்—ப. நா. ௨௦௪.

தீயகுணமுள்ள குழந்தையை நல்ல குணமுள்ளவனாக மாற்று முறை—சிவராமசுப்பிரமணியன். ௨௪௩.

தேவாலயம்—ப. நா. ௫.

நம் சரீரத்திலுள்ள சக்கரங்கள்—ப. நா. ... ௧௨௧.

நாயைக்கண்டால் கல்லைக்காணோம் கல்லைக்கண்டால் நாயைக்காணோம். சிவராமசுப்பிரமணியன் ௨௭௯.

நேரிசை ஆசிரியப்பா—சே. ரா. திம்மப்பையர். ௨௭௩.

பகவத்கீதையும் கருமயோகமும்—அ. ரங்கஸ்வாமி அய்யர். ௭௮, ௧௦௧, ௧௯௦.

பக்தி—கோபாலஸ்வாமி நாயுடு. ௧௭௮.

பிரஹ்மஞான சபையின் பிரயோஜனம்—அ. ரங்கஸ்வாமி அய்யர். ௩௩.

பிரஹ்மஞானசபையின் யந்திரம்—சிவராமசுப்பிரமணியன். ௩௧௫.

பிரஹ்மஞானசபை—ப. நா. ... ... ௩௩௨.

பிரணவ உபாஸனை—நடேசஸ்வாமி ... ... ௩௬௫, ௪௦௬.
பிரஹ்மவித்யை—ப. நா. ௩௮௧.
'புனர் ஜன்மம் உண்டு' என்பதும் அதன் அவ்சியமும்—வி. வெங்குஸ்வாமி அய்யர். ... ௧௬௧, ௨௨௦.

புத்தக வரவு:—

அவதாரங்கள். அந்நிபெஸண்டு அம்மையார் உபந்நியாஸங்கள் தமிழ் மொழிபெயர்ப்பு. ௧௯௮ ௧.
ஆங்கில அரசியல் ... ... ... ... ௧௨௮
ஆரியஜன போதினி ... ... ... ... ௨௩௩.
ஸ்ரீ இராமாயண வினாவிடை ... ... ... ௧௨௮.
இந்து சாஸ்திராபிமானி ... ... ... ... ௨௩௩.
இரட்டைப்புலவர் சரிதம் ... ... ... ௨௭௫.
இருபதாம் நூற்றாண்டின் தமிழ் அகராதி ... ௩௦௫.
கணிகாஞானி சம்வாதம் ... ... ... ௧௨௧.
கணக்கறிவிளக்கம் ... ... ... ... ௩௪௨.
கிரிஸெல்டா—ஒரு நாவல் ... ... ... ... ௩௪௨.
குலோத்துங்க சோழன் கோர்வை ... ... ... ௨௭௫.
குமாரஸம்பவம் ... ... ... ௩௪௨.
சர்வதர்சன சங்கிரகம்—தமிழ் மொழிபெயர்ப்பு ... ௯௧.
சத்தியவல்லி—ஒரு நாவல் ... ... ... ௨௩௩.
சந்திரசேகரன் ... ... ... ... ... ௩௪௨.
சமீவந மான்மியம் ... ... ... ... ௯௪.
சிவராத்திரி புராணம் மூலமும் அரும்பதவுரையும் ... ௨௩௨.
தசகாரிய விளக்கம் ... ... ... ... ௩௦௫.
திருக்குறள், பரிமேலழகருரையுடன் பாக்கெட் சைஸ். ௯௮.
திருக்குற்றாலத் தலபுராணம் ... ... ... ௨௭௫.
திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோவில் பிரதிஷ்டாபந்தனக்கணக்கு. ... ௩௦௫.
திருக்குறள் வசனம் ... ... ... ... ௯௪.
துவாதசோபநிஷத்—தமிழ் மொழிபெயர்ப்பு ... ௩௭௪.
பரத்தையோர் கேண்மை விலக்கு ... ... ... ௩௭௪.

## உள்ளுறை.

பாரதவிஜயவிடை ... ... ... ... ௩௪௨.
பிரபாவதி—ஒரு நாவல் ... ... ... ... ௩௪௨.
பிரச்னோத்ர ரத்நமாலை ... ... ... ... ௪௧௩.
மஹாவித்வான் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு. ... ௯௮.
வியாசப்பிரகாசிகை ... ... ... ... ௩௦௫.
வேதாந்த சூளாமணி ... ... ... ... ௩௪௨.
ஸத்குரு பாதங்கள் ... ... ... ... ௩௭௪.
ஸ்துதி மஞ்சரி ... ... ... ... ௨௩௨.
பூர்ணசந்திரோதயம் என்ற நாமகரணம்—பத்திராதிபர். ௧.
பூர்வஜந்மங்களைக் கண்டுபிடிக்கு முறை—ப. நா. ௭௧.
பெற்றோருடையவும், மக்களுடையவும் உத்திரவாதம்—ஆத்மநாதன். ... ௧௧௭.
மடாதிபதிகளுக்கோர் விஞ்ஞாபனம் ப. நா. ... ௪௫.
மதங்களுக்குள் சகோதரதர்மம் நிகழ வேண்டுமென்பது—A. B. ப. நா. ௨௧௨, ௨௪௭, ௨௮௫, ௩௧௮, ௩௫௪, ௩௯௧
மகாலயபக்ஷமும் நவராத்திரியும்—பி. எஸ் சுப்பிரமணிய அய்யர் ... ௨௫௯, ௩௩௪.
மாது ஸ்ரீ அந்நிபெஸண்டம்மையார் பிரசங்கம்—ஸ்ரீராம். ௪௦.
மானுடசரீரம். இசக்கியாடும் பெருமாள் ... ௨௮௧.
விஷ வியாதிகளை விலக்குமுறை. பத்திராதிபர் ... ௯௦.
வீண் கவலைகொள்வதைத் தவிர். சிவராமசுப்பிரமணியன் ௧௯௯.
வைதிக சைவம். தெ. கிருஷ்ணசாமி ... ... ௧௧௪.
ஸமய தத்வம். ஸ்ரீநிவாசாச்சாரியார் ... ... ௧௫௩.
ஜீவன் ஒரு சரீரம்விட்டு மறுசரீரம் பெறும்வரையிலுள்ள மத்தியகாலம். சிவராமசுப்பிரமணியன். ௩௪௭.

பத்திராதிபர்.

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.


சென்னைராஜதானியின் தென்பாகத்திலுள்ள பிரஹ்ம
ஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரசுரமாகி நடைபெறும்.

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

| தொகுதி 1. | 1910ஹு மேமீ<br>சாதாரணஹு வைகாசிமீ | பகுதி 1. |
| --- | --- | --- |


### பூர்ணசந்திரோதயம்.

நமஸ்தே.

வைகாசிமாசம் சிரேஷ்டமான மாசம். அதில் பௌரணை மிகச் சிரேஷ்டமானது. அது ஞானிகளுக்கு முக்கியதினம். அவ்வுயர் நலம் அமைந்த தினத்தை முன்னிட்டு இப்பத்திரிகை வெளிவருதலின் இதற்கு பூர்ணசந்திரோதயம் என்ற நாமகர்ணம் செய்திருக்கிறது. சந்திரன் யோக சாஸ்திரத்தில் முக்கியமான தேவர், மனத்தத்துவத்தின் அதிபதி. “ சந்திரமாமநஸோஜாத: ” என்று புருஷசூக்தம் உபதேசிக்கிறது. எக்காரியமும் மனத்தால்தான் முடியக்கூடியது.

“ மனஸைவேதமாப்தவ்யம் ”

என்பது வேத வாக்கு. வேதத்திலும், புராணத்திலும், சந்திரனைப் பற்றி ஒரு கதை அடியில் வருமாறு:—

ஒரு காலத்தில் பிரகஸ்பதிபகவானின் பத்நி *தாரை என்பாள் சந்திரனிடம் சென்றாள். சில காலம் அவருடன்வசித்தாள். பிரகஸ்பதி பகவானுக்குத் தெரிந்து பலமுறை திரும்பிவரும்படியாக சொல்லியனுப்பியும், அவள் வரவில்லை. பின்பு அவரே நேரே போய் சந்திரனிடம் சொன்னதாவது "என்பத்நியை அனுப்பு. என் என்பத்நியை நீ வைத்துக்கொண்டிருக்கிறாய்? இது சரியல்ல. தர்மவிரோதமான காரியம். மேலும் உனக்கு யான் குரு. குருபத்நி சம்பந்தத்தினால் மஹாபாதகம் உனக்கு வரும்." என்று பிரகஸ்பதி சொன்னார்.

அதற்கு சந்திரன் சொன்னதாவது "அவள்என்னிடம் வருவதற்கு யான் உத்தரவாதிஅல்லன். அவளாகவே என்னிடம் வந்தாள். அதனால் நான் பாபத்திற்கு உள்ளாகேன்" என்றான். அதன் பிறகு அவள் கர்ப்பமானாள். பின்பு அக்கருப்பத்துடன் பிரகஸ்பதி பகவானிடம் சென்றாள். புதன் பிறந்தான். இவ்விதம் கதைநடைபெறுகிறது. இதன் உண்மை என்னவென்று விசாரிப்போம். பிரகஸ்பதி என்பவர் தேவர்களின் குரு. பிரகஸ்பதி என்றாலும் வாக்பதி என்றாலும் ஒக்கும். கர்மகாண்டத்திற்கு அவர்அதிபதி. தாரை அவர்பத்நி. அதனால், முக்கியமான சிஷ்யர்வார். கர்மகாண்டத்தின் விஷயங்களை எல்லாம் நன்கு உணர்ந்து, யோகமார்க்கத்தில் பயிலவேண்டுமென்று அவாக்கொண்டு, அதில் சிறந்தவரான சந்திரனிடம் சென்று, அவர் உபதேசித்த முறையைக்கொண்டு பயின்று, புதனைப்பெற்றாள். அதாவது, போதநிலையை அடைந்தாள். புத்திதத்துவநிலையை அடைந்தாள். உயர்ஞானம் பெற்றாள், என்பதே இக்கதையில் உருவகப்படுத்தியிருக்கின்றது. இவ்விதமான ஞானத்திற்கு அனுகூலமானவன் சந்திரன். இக்காரணம் பற்றி அன்றோ "பரமனே பரமயோகி" யான சிவனார் தன் சிரசில் சந்திரனை வைத்திருக்கின்றார்போலும்.

உலகத்தில் உள்ள வஸ்துக்களெல்லாம் ரயி என்றும் பிராணன் என்றும் இருதலையாகப் பிரிகின்றன. ரயி என்பது பிரகிருதி. பிராணன் என்பது புருஷன். இவ்விரண்டையும் முறையே சந்திரன் சூரியன் என உருவகப்படுத்தி பிரச்ந உபநிஷத்தில் பிரஸ்

* தாரை என்ற வார்த்தையின் அர்த்தம்-மேலான ஸ்திதிக்குக் கொண்டு போகும் மனோவிர்த்தி.

தாபித்திருக்கிறது. அமாவாசைகாலத்தில், சந்திரனின் எல்லாக் கலைகளும் அந்தர்முகப்பட்டு, ஒருகலையான அமிர்தகலைமாத்திரம் இருக்கிறது. பின்பு வரவர சுக்கிலபக்ஷத்தில் தினம் ஒருகலையாக 15 கலைகள் ஏற்படுகின்றன, 15 கலைகளும் உண்டாகி பூர்ணம் ஏற்படவே, யோகியானவன், பூர்ணம்பெறுகிறான். தானும் ஈசுவரனுகிறான் என்பதை சூசிப்பிக்கும் ஒருமுறையாக இருக்கிறது.

பெரும்பாலும் ஞான விஷயங்கள் இப்பத்திரிகை வாயிலாக வெளிவருமாகையால், பூர்ணசந்திரோதயம் என்ற பெயர், இதற்கு இடப்பட்டிருக்கின்றது.

இப்பத்திரிகையில் பிரஹ்மஞானசபையாரால் வெளிவந்திருக்கிற ஏராளமான ஆங்கில புஸ்தகங்களிலுள்ள உண்மைகளையும், இந்த தேசத்தில் வடமொழி தென்மொழிகளில் மஹான்களால், உபதேசிக்கப்பெற்றுள்ள உண்மைகளையும், ஜனசமுகத்திற்குரிய பொதுவான தர்மங்களையும், நீதிமுறைகளையும்பற்றிய வியாசங்கள் எழுதப்படும். சத்தியம் ஒன்றே இதன்கடைப்பிடி. மததூஷணை முற்றும் விலக்கப்பெறும், ஆனால் அந்த அந்த மதங்களின் உண்மைகள் வெளியிடப்படும். ராஜாங்கசம்பந்தமான விஷயங்கள் விலக்கப்படும். வீண்வாதங்களும் குதர்க்கங்களும் இப்பத்திரிகையில் பிரசுரம் செய்யப்படா.

இக்காலமே நன்மையைக்கொடுக்கும் நற்காலம். மஹாபுருஷர் அவதாரமாகவேண்டியகாலம்- இவ்வருஷம் ஜனவரிமீ 11-உயில் கிரகங்களின் நிலையால் அவதாரபுருஷர்கள் ஜனிக்கும்உற்றகாலம்- என்று அறிகிறோம். அநேக ஆயிரிவருஷங்களுக்கு முன் கிரகசாரங்கள் இவ்விதம் இருந்ததாம். சுமார் 10000 வருஷங்களுக்கு முன்னர் இவ்விதம் இருந்தது என்று, ஜோதிஷசாஸ்திரியான ஸட்கிளிப் என்பவர் சொல்லுகிறார்- அம்மாகாபுருஷர் சுமார் 30 - 40 வருஷங்களுக்குள் நம்முடைய ஊனக்கண்ணுக்கு முன்தோன்றுவர் என்று, பிரஹ்மஞான புத்தகங்களின் மூலம் தெரியவருகிறது.

வானத்தின் மண்ணிற் பெண்ணின் மைந்தரிற் பொருளில் ஆசை
தானற்றுத் தமையும் நீத்துத் தத்துவ முணர்ந்த யோகர்
ஞானக்கண் கொண்டே யன்றி காடருஞ் ஜோதி, மண்ணோர்
ஊனக்கண் கொண்டுங் காண உடன்விலை பாடல் செய்வான்,

அவன் தான் மஹாபுருஷன் என்று அறியும்படி நாம் அறிவைப் பெறவேண்டும். ஸ்ரீ கிருஷ்ணபகவான் அவதாரத்தை அறிந்தவர் அக்காலத்திற் சொற்பப் பெயர்கள்—மற்றவர் அத்தான் என்றும், மாமனென்றும் சாதாரணமனிதனைப்போல் அவர்பால் உறவு கொண்டாடினர்கள்.

𑌅𑌵𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿 𑌮𑌾𑌂 𑌮𑍂𑌢𑌾 𑌮𑌾𑌨𑍁𑌷𑍀𑌂 𑌤𑌨𑍁𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌮𑍍 ।
𑌪𑌰𑌂 𑌭𑌾𑌵𑌮𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑍋 𑌮𑌮 𑌭𑍂𑌤𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ॥

இதன் பொருள்—இறைவனாக நான் இருக்க, அதன் உண்மையை அறியாத மூடர்கள், மனிதசரீரத்தையெடுத்துக்கொண்டதினால், என்னை அவமதிக்கிறார்கள்.

இவ்விதமே, மஹாபுருஷர்கள் அவதரிக்குங்காலத்தில், அவர்களை நிந்திப்பதும் ஹிம்ஸிக்கிறதும் அவர்காலமானமேல், பின்பு மஹிமை தெரிந்து, அவர்களை உத்தேசித்து உயர்ந்தகோவில்கள் கட்டி ஆராதனைசெய்வதும் உலகத்தாரின் சுபாவம். அம்மாதிரி நடவாமல் இனி அவதரிக்கப்போகும் மஹாபுருஷனை அறியும் வண்ணம் நாம் ஆயத்தம்பண்ணிக்கொள்ளவேண்டும்.

அதற்கு அனுகூலமாக இப்பத்திரிகையும் ஒருசாதனமாக இருக்கவேண்டுமென்ற பிரார்த்தனையுடன் இப்போது ஆரம்பித்திருக்கிறோம்– எல்லாம் இறைவன் அருளால் நடைபெறுகிறது– "அவன் அவனை கூத்தாட்டுவானாகி நிற்கின்ற" பரமேசுவரனிடம் இப்பத்திரிகையை அர்ப்பணமாகச் செய்விக்கின்றோம். இப்பத்திரிகை மேன்மேலும்பரவி, ஜனசமூகத்திற்கு க்ஷேமத்தையும் ஞானலாபத்தையும் உண்டுபண்ணும்படியாக அவர் அருள் புரிவாராக.

ஓம் தத் ஸத்.

பத்திராதிபர்.

# தேவாலயம்.

## அதன் தற்கால நிலைமையும் அதன்சீர் திருத்தமுறையும்.

எங்கும் நிறைந்தவராய், எல்லாமாய், யாவையும் நடத்துகிறவராய், ஆனால் "மாற்றம் மனங்கழிய" நின்றவராய், மறைந்தவராயிருக்கும், கடவுளை ஆத்மாக்கள்வழிபட்டுஉய்யும்பொருட்டு, மஹரிஷிகளால் தேவாலயங்கள் ஸ்தாபிக்கப்பெற்று, அவைகளின்கண் வேதாகமசாஸ்திரங்களிற்கண்ட பிரதிஷ்டா முறைகளின்படி, விக்கிரகங்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இவ்விக்கிரகங்கள் வேதமந்திரத்தின் மூலமாக ஆகமவிதிகளின்படி பிராணப்பிரதிஷ்டை செய்யப்பெறவே, ஈசுவர சாந்நித்தியம் ஏற்படுகிறது. இறைவன் அருள் பிரகாசிக்கின்றது என்பார்கள். பரிமளமான வாசனை வஸ்துக்களைச் சேர்த்த ஊதுவத்தியை ஓரிடத்திற்கொளுத்திவைத்தால், எவ்விதம் நல்லவாசனை எங்கும் பரவிஎல்லாரையும் சந்தோஷிப்பிக்குமோ, ஒரு விளக்கானதுஇருட்டைப்போக்கி பிரகாசத்தை எவ்விதம்எங்கும்பரவச்செய்யுமோ, அம்மாதிரியாக மந்திரசக்தியால் பிரதிஷ்டை செய்யப்பெற்ற விக்கிரகம், அதனைச்சுற்றுமுள்ளதேசத்தில்ஞானப்பிரகாசத்தையும் ஜனாநுகூலமான எல்லா நன்மைகளையும் உண்டுபண்ணும். எவ்வளவுக்கு எவ்வளவு பக்திசிரத்தையுடன் ஆராதனைகள்நடத்தப்பெறுகின்றனவோ, வேமந்திரங்கள் கோஷிக்கப்பெறுகின்றனவோ, ஸ்தோத்திரமான கானங்கள் பாடப்படுகின்றனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு, ஈசுவரன்அருளும் அநுக்கிரகமும் ஜனங்களுக்கு உண்டாகும். ஜனங்கள் எல்லா திவ்ய சம்பத்துக்களையும் பெறுவார்கள். நீர்வளம், மழைவளம், நெல்வளம், தாந்நியவளம், ஜனசமூகத்தின் க்ஷேமம் இவை எல்லாம் உண்டாகும். ஜனங்கள் நல்வழிப் படுவார்கள். தீயபாவங்கள் தீயசெயல்கள் உண்டாகா, அகன்று போம். வியாதிகள் அணுகா. கொடியநோய்கள்தேசம் புகா. எல்லாம் நன்மையாகவே நடைபெறும். கல்வி அறிவு ஒழுக்கங்களும், ஈசுவர பக்தியும் ஜனங்களின்கண் தழைத்தோங்கும் மந்திரங்களால்

ஊட்டப்பெறும் சக்திகளுக்குசிலவருஷங்களுக்கு ஒருமுறை அதாவது 25 வருஷங்களுக்குள், ஒரு முறையாவது கும்பாபிஷேகம் என்ற கிரியையால் மறுபடிமறுபடி மந்திரங்களின்மூலமாக (சக்திகளுக்கு) ஏற்றம் கொடுக்கவேண்டும். இது ஆகம விதி.

2. தேவாலய பூஜைகள், உத்ஸவாதிகள் விதிப்படியும் சிரத்தை பத்தியுடனேயும் செய்யப்படாமல் இருந்தால், மழைகுன்றும், பஞ்சம் வரும். விஷநோய்கள் சம்பவிக்கும். கொலை களவு முதலிய தீய தொழில்கள் அதிகரிக்கும்.

ஆற்றரு நோய்மிகும், அவனிமழை குன்றும்,
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்,
*கூற்றுதைத் தான்றிருக் கோவில்க ளானவை
சாற்றிய பூஜைகள் தப்பிடிற் றானே.

முன்னவ னார்கோயிற் பூஜைகள் முட்டிடின்,
மன்னர்க்குத் தீங்குள, வாரி வளங்குன்றும்,
கன்னம் களவும் மிகுத்திடும், காசினிக்கு
என்னருள் நந்தி எடுத்துரைத் தானே.—திருமந்திரம்.

3. ஆலயங்களின்பூஜை முதலியவை நன்றாயும்,நேர்மையாயும், நடத்தப்பெறும்பொருட்டு முற்காலத்தில்வேதாகமங்களில், உண்மையான பக்தியுடனே, பயிற்சியுள்ளவர்களை பூஜகர்களாக நியமனம் செய்து வந்தார்கள். அவர்கள் உயர்ந்த உண்மையான பேரன்புள்ளவர்கள். நல்லொழுக்க முள்ளசீலர்கள். சம தமாதி சம்பத்துள்ளவர்கள். அதனால் அனுக்கிரகசக்திமான்கள். யோகமுறைகளில் உயர்ந்த வழியாகிய தீக்ஷைகள் பெற்றவர்கள். இத்தகையரால் செய்யப்படும் பூஜைக்கிரியைகளால் ஈசுவரன் சாந்நித்தியராவர். பக்தஜனங்களுக்கு க்ஷேமங்கள் உண்டாகும். மனத்தூய்மை உண்டாகும். மனத்தெளிவும் விரிவும் நேரிடும். அதனால் ஈசுவர சாக்ஷாத்காரம் பெற ஏதுவாகும். மெய்யுணர்வு பெறுவார்கள்.

---

* கூற்றுதைத்தான்-பரமசிவன்.

இவ்வித ஒழுக்கமின்றியும், வேதாகம நூற்பயிற்சியின்றியும், ஆசாரங்களின்றியும் உள்ள பூஜகர்களைக்கொண்டு வேதமந்திரங்கள் ஓதாமல், செய்விக்கும் ஆராதனைகள் பயனற்றனவாம். சாம்பரிற் செய்த ஆஹுதி போன்றனவாம்.

4. முற்காலத்தில் பூஜை முறைகள் நடைபெற்ற உயர்வைப் பற்றி அதிகமாக நான்சொல்லவேண்டுவதில்லை. நம்தேசம் மேன்மை பெறவேண்டும் என்று, ஊக்கத்துடன் உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம்செய்துகொண்டுவருகிற மாக்ஷிமை தங்கிய அன்னி பெஸண்டு அம்மையார் சொல்லியிருக்கிற வசனங்களைச் சொல்லுகிறேன். கவனியுங்கள்.

“முற்காலத்தில் தேவாலயங்களிருந்த நிலைமையைப்பற்றி நான் என்னசொல்லுவேன்! அதன்கண் ஈசுவரதேஜஸ் நிரம்பியிருந்தது. தேவதாசாந்நித்தியம் விளங்கியது. கோவிலுக்குள் நுழையும் பக்தர்கள் கண்ணிலே தேவதா அருள் பிரசந்நமாகும். கோவிலுக்குட்புகும் ஒவ்வொருவருக்கும் சிரத்தாபத்தியுடன் சாந்தியை உண்டு பண்ணியும், உலக எண்ணங்களை மாற்றியும், ஈசுவரபாவங்கள் உதயமாகவும், தானாகவே தங்குதடையின்றி ஸ்தோத்திரத்தை வாய்பாடவும், சுவர்க்கலோகங்கள் இருக்கின்றமைபோல, நற்பாவங்கள் தாமே உணரவும்; இவ்விதமாய் தேவ அருள் இறங்குதல் அநுபவசித்தமாக இருந்தது. இவைகளில் விசுவாசமில்லாதவன்கூட அதன்கண் பிரவேசித்த மாத்திரையில் அங்கிமிஷத்திலாவது, அதில் கிரீடித்துக் கொண்டிருக்கும் அருள் விசேஷத்தாலும், ஈசுவரபிரதிமையினின்று விளங்கும் சக்தியினாலும், தான்முற்றுமாறினவனாய் இருந்து அநுபவிப்பான்.

பிராசீன காலங்களில் இவ்விதம் பரிசுத்தம் நிரம்பியிருந்தது. ஞானமும் சீலமும் எப்போதும் பூஜகர்களிடம் விளங்கின. அவர்கள் அறிவுடனே மந்திரம் ஜபித்தார்கள். தேவாக்கினியால் மனசும் வாக்கும் சுத்தம் செய்யப்பெறாத பூஜகர்கள் கோவிலை அணுகார். பக்தர்கள் அன்புடனே கொணர்ந்த நிவேதனங்களைப் பூஜகர்கள் பரிசுத்தமான கைகளாற்பெற்றுத் தேவதைகளுக்குச் சமர்ப்பிக்க, அந்நிவேத

னங்கள் அதிக சிரேயஸ்ஸைப்பெற்றன. ஆகவே எல்லோரும் அனுக்கிரகம் பெறுவார்கள். கோவிலிலிருந்து தேவசக்தி எங்கும்பரவியது. கோவில்களில் கண்ணுக்குத்தோன்றாத தேவர்கள், மந்திரகோஷங்களையும், கானங்களையும், பூஜைகளையும் மனிதர்களுடனே சேர்ந்துசெய்துவந்தார்கள். இது கனவன்று. வாஸ்தவத்தில் மனிதர்கள் தேவசாந்நித்தியத்தைஉணர்ந்தார்கள். கோவில்களிற் பிரதிஷ்டைசெய்திருந்த பிரதிமைகள், அடையாளமாகவும், குறியாகவும், சமிக்கையாகவும், ஈசுவர விசேஷணங்களை விளக்கச்செய்ததன்றியும், சக்திகளும்விளங்கின. அச்சக்திகளின் உயர்வான தன்மை ஈசுவர அருள் என்றும், தாழ்வான தன்மை காந்த சக்தி என்றும் வழங்குவன. ஸ்தூலபூமியின்கண் ஏதேனும் ஒரு பொருளை எடுத்துக் காந்தசக்தியைப் புகட்டி அதன்மூலமாய் ஸ்பரிசமாத்திரத்தால் நோய்களைத் தீர்ப்பார்கள். அவ்விதமே, ஈசுவரபிரசாதம் பெற்ற மஹருஷிகள் தேவதாசக்திகளை சித்திபூர்வமாகப்பெற்று, பிரதிமைகளில்ஆரோபித்துப்பிராணப்பிரதிஷ்டை மூலமாக அவற்றின்கண் சக்திவிளங்கச் செய்வித்து வந்தார்கள். ஆகவே அச்சக்தியைப் பெற்ற பிரதிமைகளை அணுகினவர்கள் உபசாந்தியைப் பெற்றார்கள். பக்தர்களுடைய ஸ்தூல சூக்ஷ்ம தேகங்களின்கண்ணுள்ள பரமாணுக்களும், அப்பிரதிமைகளின்சக்தி விசேஷத்தால், நேர்மையானவையாகி சொலிக்கவும் ஏற்பட்டன."

[பிராசீனதர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் என்ற புஸ்தகத்தினின்று எடுத்தது.]

நம் தேசத்தில், முக்கியமாகச்சென்னைஇராஜதானி தென்பாகத்தில் இருக்கின்ற பெரிய தேவாலயங்களைப் பார்த்தால் இத்தகைய விசேஷம்நன்கு விளங்கும். இவ்வளவு விஸ்தாரமான மண்டபங்கள், அழகான பல கோபுரங்கள் முதலிய கட்டிடங்களை நிர்மாணிக்கிறதற்குமுன் ஜனங்கள்மனத்தின்கண் எவ்வளவு பக்திசிரத்தை உண்டாயிருக்கவேண்டும். அவ்விதம் உண்டாவதற்கு ஈசுவர சந்நிதானத்திய பிரத்தியக்ஷ அனுபவம், எவ்வளவுதூரம் ஜனசமூகத்தில் பரவியிருக்கவேண்டும். அத்தன்மையான அனுபவம் ஜனிக்கிறதற்கு, எத்தன்மையான மஹா புருஷர்கள், ஆலயங்களின்கண் வேதாகம விதிமுறை வழுவாது, பூஜை முதலிய ஆராதனைகைங்கரியங்களை உயர் நலம் அமைந்த அன்புடனேசெய்திருக்கவேண்டும்.

"அன்போ டுருகி அகங்குழைவார்க் கன்றி
என்பொன் மணியினை எய்தவொண்ணாதே." திருமூலர்.

5. தேவாலயங்களின் அக்காலத்திய நிலைமையும், இக்காலத்திய நிலைமையும், ஒப்பிட்டுப்பார்த்தால், நினைக்க நினைக்க மனது தளரும்; வருந்தும், கண்ணீர்சொரியும், அந்தோ! என்னகொடுமையானகாலம் வந்துவிட்டதென்று நாம் அலரவேண்டுமன்றோ? நம் தேசத்தில் மழை பொய்த்துப்போய்விட்டது. 10, 11, வருஷங்களுக்கு ஒரு முறை நியதிகமான பஞ்சவட்டம் ஏற்பட்டுவிட்டது. விஷநோய்களான வசூரி, வாந்திபேதிகள் நம் தேசத்தில் குடிகொண்டு விட்டன. நூதன கொடிய வியாதியான பிளேக் என்ற நோயும் இந்தத்தேசத்தை உறைவிடமாகக்கொள்வதுபோலப் பயப்படுத்துகிறது.

ஆலயங்களின் உள்ளும் புறமும் ஒரே ரீதியாக இருக்கின்றன. எவ்வித சக்தி அருள் இப்போது இல்லாமல் பொய்த்துப்போயிற்று. ஆனால் சிற்சில ஆலயங்களில் பக்தர்களின் அன்பினால் பூர்வ சக்தி விசேஷம் இன்னும் தங்கியிருக்கின்றது. அதுவும்கூட வெளியேறிப் போக ஆயத்தம்பண்ணுமாறுபோல மலினமாகிக்கொண்டுவருகிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், தேவாலயங்களின் தர்மகர்த்தாக்கள், பூஜகர்கள் இவர்களின் துராசாரமும், கல்வியின்மையும், ஈசுவர பக்திக்குறைவும், வேதாகமசாஸ் திரப்பயிற்சிக் குறைவுமேயாம். கோவில்கள் எல்லாம் இருட்டுமண்டபங்களாயின. ஸ்திரீகள் தனிமையாகப்போகயோக்கியதை இல்லாத கோவில்களும்இருக்கின்றன. பெண்பாலர்கள் காப்பில்லாத கோவில்களிலும் ஈசுவர சாந்நித்தியம் விளங்குமோ. கோவில்களில் உண்மையான ஆராதனைகள்கிடையா; வேடிக்கைகளும், ஆடல்களும், பாடல்களும், மனத்தைக் கவரக்கூடிய பல விஷம விஷயங்களில் பிரவிர்த்திகளும், எல்லா இந்திரியங்களின் நுகர்ச்சிக்கிடமான உணவுகளும், விஸ்தாரமாக இருக்கின்றன. பல நிய சாமான் உள்ள கடைகள் உண்டாகிக்கொண்டு வருகின்றன. அவைகளால் வீண்சப்தமும், கூச்சலும், போராட்டமும், சச்சரவும், அவைகளால் போலீஸ்பந்தோபஸ்துக்களும் அதிகம்ஏற்பட்டுவருகின்றன. இத்தன்மையான கதியின் பயனைப் அநேக கிராமங்களின்கண் உள்ள ஆலயங்களில் பூஜைகள் கிடையா. திருக்காப்பு பலமான

காப்பாக ஏற்பட்டுவிட்டது. முக்கியமான பட்டணங்களில் உள்ள ஆலயங்களிலும், போலிக் குருக்களை வைத்துக்கொண்டு, போலிப் பூஜைகள் நடத்தப்பெறுகின்றன. வேதங்களின் ஒரு மந்திரமேனும் அக்கோவில்களில் உச்சரிப்பதாகக்காணோம். ருத்ரம், சமகம், புருஷ சூக்தம் முதலான மஹாமந்திரங்கள், சிவ, விஷ்ணு, நாமாவளி இவை முதலியவைகளைச்சொல்லுகிறதில்லையாம். இவைகளின்றி பூஜைகள் உயர்வுள்ளவைகளாகமாட்டா. இப்பூஜைகளால் பலனில்லை. இன்னும் இக்காலத்திய கோயில்களின் குறைகளைச் சொல்லப்புகின் காலம்போதாது. கேட்போர்களுக்கும் அருவருப்பை உண்டுபண்ணும்.

6. இனி எவ்விதம் இவ்வாலயங்கள் முன்போல நல்லஸ்திதிக்கு வரக்கூடும்? அதற்கு ஏற்ற சீர்திருத்த முறைகள் என்ன? அவைகளைச் சற்று விசாரிப்போம்.

(1) ஒவ்வொரு பெரிய தேவஸ்தானத்தில் ஆதியில் இருந்தபடி வேத அத்தியயந பாடசாலை ஒன்றும், தமிழ் நெடுங்கணக்கு முதலாக தேவாரம், திருவாசகம், அல்லது நாலாயிரப் பிரபந்தம் ஈறாக தமிழைக் கற்றுக்கொடுக்கும்படியாக ஒருதமிழ்ப்பள்ளிக் கூடமும் ஸரஸ்வதி விலாஸம் என்ற வேதாகமசாஸ்திர புராணாதிகளின் புஸ்தகசாலை ஒன்றும் அமைத்தல் வேண்டும். தேவாலயங்களுக்கு முக்கியமானது பூஜை. அது வேதாகமப்பயிற்சிஉள்ள நல்லொழுக்கமுள்ள குருக்களால் நடத்தப்படவேண்டும். பூஜாகாலத்தில் வைதிக பிராமணர்களைக்கொண்டு ருத்திரம், சமகம், புருஷசூக்தம் முதலிய மஹாமந்திரங்களை ஜபிக்கும்படி செய்யவேண்டும். குருக்கள் முதலானவர்களின் கல்விப்பயிற்சிக்காக வேதாகமபாடசாலை ஒவ்வொருஜில்லாவிலும் ஏற்படுத்தல் வேண்டும். ஒருதேவஸ்தானத்திற்கு ஒருபாடசாலையை ஏற்படுத்தி நடத்த சக்தியில்லாமற்போனாலும், ஒருஜில்லாவிலுள்ள பல தேவஸ்தானங்கள் சேர்ந்து பொதுவாக பெரிய பாடசாலையை ஏற்படுத்தல் கூடும். இப்பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களுக்கு அன்னவஸ்திரம் கொடுக்கவேண்டும். இப்பாடசாலைகளில் பரீக்ஷையில் தேர்ந்தவர்களுக்குள்ளேயே கோவில்களில்பூஜகர்களைநியமிக்கவேண்டும். அவர்களுக்குஅதிகசம்பளம் கொடுக்கவேண்டும். முன் பிராசுபாக்தியஸ்தர்களிருந்தால் அவர்களை இப்பாடசாலைகளில்கற்று, பரீக்ஷைகொடுக்கும்படிவேண்டிய தூண்டுதல்கள் செய்ய

வேண்டும். அதற்கு வேண்டிய திரவியசகாயம் செய்தல்வேண்டும். அப்படி யோக்கியதை பெறுதவர்களை தேவாலயங்களில் பூஜகர்களாக நேமித்தல் கூடாது.

(2) ஒவ்வொரு தேவாலயத்திலும் அபிஷேக பூஜா காலங்களில், ருத்திரம், சமகம், புருஷசூக்தம், நாமாவளி ஜபிக்கச் சரியான வைதிக பிராமணர் ஒருவர் அல்லது இருவரை நியமிக்கவேண்டும். வேதமந்திரம் எவ்வளவுக்கு எவ்வளவு கானம்பண்ணப் படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு சிரேயஸ் உண்டாகும். ஒவ்வொரு கோவிலிலும் ஒருவர் அல்லது இருவர் தேவாரம் திருவாசகம் முதலியவை பூஜாகாலங்களில் கானம் பண்ணும்படி செய்யவேண்டும்.

(3) இப்போது அநேகமுக்கியமானக்ஷேத்திரங்களில் நாட்டுக்கோட்டை செட்டிப்பிள்ளைகளால் வேதசாஸ்திரபாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஆகம சாஸ்திரத்தையும் கற்றுக்கொடுக்க உபாத்தியாயரை நியமனம் செய்து, அதையும் கற்பிக்கும்படி திட்டஞ்செய்தால் நன்மையாகவிருக்கும். அப்பாடசாலைகளில் குருக்கள்களின் குமாரர்களையும் படிக்கும்படியாக கண்டிக்கவேண்டும். தேவஸ்தானம் மேல்விசாரணைக்காரர்களும் வேதாகம சாஸ்திரங்களின் உண்மைகளை பொதுவாகவேனும் கற்றறிந்திருக்கவேண்டும். நல்ல சீலர்களாக இருக்கவேண்டும். உண்மையான பக்தர்களாக இருக்கவேண்டும். தேவாலயங்களின் சொத்துக்களை அபகரியாமலாவது இருக்கவேண்டும். அவைகளின் அபிவிருத்தியில் தம்முடைமைகளிற்போல் சிரத்தையும் கவலையும் உள்ளவர்களாக இருத்தல்வேண்டும். ஈசுவரசொத்தை விஷமாக நினைக்கவேண்டும். அதின் வியாபிப்பில் பயம் இருக்கவேண்டும்.

(4) உத்ஸவாதிகளை அதிக டம்பமாகச்செய்யாமல் ஆனல் சாஸ்திரமுறை வழுவாமல் சரியாக நடத்தவேண்டும். அக்காலத்தில் வேதம், தேவாரம், திருவாசகம், நாலாயிரப்பிரபந்தம் இவைகளை ஓதவேண்டும். சமயமுறைகளிற் பயிற்சியுள்ள வித்வான்களைக்கொண்டு, பக்தி ஞானங்களைப்பயக்கக்கூடிய உபந்நியாசங்களைச்செய்விக்கும்படி ஏற்பாடுகள் செய்விக்கவேண்டும்.

(5) வித்வத்சபை என்று அவ்வுத்ஸவ சமயங்களில், முக்கியமான செல்வமுள்ள தேவஸ்தானங்களிலாவது ஏற்படுத்தி, வேத ஆகம சாஸ்திரங்களிற் பரீக்ஷையின்மீது வித்துவான்களுக்கு சம்பாவனைகள், பரிசுகள் கொடுக்கவேண்டும். உத்ஸவங்களை இப்போது நடத்துகிறபடி ராஜஸமாயும் தாமஸமாயுமிராமல், சாத்விகமாக நடத்தவேண்டும்.

(6) நம் தேசத்தில் வடபாகங்களில் பல தீர்த்த விசேஷங்கள் முக்கியமாம். தென்னாடுகளில் க்ஷேத்திர விசேஷங்கள் முக்கியமாம். மேலும்க்ஷேத்திரங்களான தேவாலயங்களில், யோக சாஸ்திரத்தில் உள்ள தத்துவங்களை பிரிதிகப்படுத்தி அவைகளில் பகிர்முகமாகப் பழகி உண்மைகளை அறியும்பொருட்டும், அவைகளால் மனத்திற்கு நல்லஸம்ஸ்காரங்கள் உண்டாகும்பொருட்டும், மகான்களால், யோக ஞான முறைகளின் உண்மைகள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. ஆகவே வேதாகம சாஸ்திரங்கள் எப்படி முக்கியமோ அவ்விதமே தேவாலய கட்டிடங்கள் முக்கியமானவை. தேவாலயங்களை மராமத்துகள் செய்வித்து நல்ல ஸ்திதியில் வைத்துக்கொள்ள வேண்டுவது முக்கியம். முழுதும் ஜீர்ணமாகவும் சிதைந்தும்போனலொழிய தேவாலயங்களை முற்றும் இடித்துத் தகர்த்து நூதன பிரதிஷ்டை செய்தல் நலமன்று. நியாயமுமன்று, ஈசுவர சம்மதமுமன்று. ஏனென்றால் எத்தனையோ மகான்கள் ஆராதனைக்கு தேவாலயங்களுக்குள் பிரவேசித்து வந்தனை வழிபாடுகள் செய்து, தங்களுடைய ஸ்தோத்திரங்களினாலும், தங்களுடைய உயர்ந்தமனோ சங்கற்பங்களினாலும் க்ஷேத்திரத்தில் நல்லபாவங்களை உண்டுபண்ணி புநிதமாகச் செய்திருக்கிறார்கள். முற்றும் இடிந்தால் அந்தச் சக்தி அற்றுப்போம். அதனால் கூடியவரை எம்மட்டில் புராதன கட்டிடங்களை மராமத்துச்செய்து வைத்திருக்கக்கூடுமோ அம்மட்டில் செய்தலே நலம். நமக்கு பணம் இருக்கிறது என்று கண்டபடி கோவில்களை இடித்து நூதன பிரதிஷ்டைசெய்தல் ஜனங்களுக்கு க்ஷேமக்குறைவை உண்டாக்கும். அநேக கோயில்கள் இடிந்து போயின. அவைகளைச் சீர்படுத்தி வேண்டிய மராமத்துக்கள் செய்ய வேண்டும்.

(7) ஒவ்வொருகிராமத்திலும் ஒருசிவன் கோவில், ஒருவிஷ்ணு கோவில் உண்டு. உலகசம்பத்தைக்கொடுக்க விஷ்ணுவின் ஆலயமும், ஞானசம்பத்தைக்கொடுக்க சிவாலயமும் ஆதியில் பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளில் அநேகம் இடிந்து போயின. அவைகளை சீர்படுத்தி காப்பாற்றவேண்டும்.

(8) ஒவ்வொரு பெரிய ஆலயத்திலும் ஜனங்களின் பிரயோஜனத்திற்காக ஆயுர்வேத வைத்தியசாலையொன்று ஏற்படுத்தல்வேண்டும். பிறர் பிணிதீர்த்தல் அறமெனத்தகும்.

(9) நல்லஸ்திதியிற்கொண்டுவரவேண்டுமென்ற எண்ணத்துடன் ஒரு விசாரணைதார் அல்லது தர்மகர்த்தா உண்மையாக எத்தனம் செய்வாராகில், இன்னும் அநேக சீர்திருத்தமுறைகள் தம் மனசுக்கே மேன்மேலும் தோன்றும். எல்லாம் நன்றாய் நடைபெறவேண்டுமானல், தேவஸ்தானம் அதிகாரிகளுக்கு உள்ளபடி உண்மையான சிரத்தையும் ஈசுவரபக்தியு மிருக்கவேண்டும். இவையன்றி எத்தன்மையான சீர்திருத்த விதிகளும் யுக்திகளும் சொன்னலும், பயனில்லை பயனில்லை. அத்தகையர்களாய், தேவஸ்தான சம்பந்தப்பட்டவர்கள் உண்டாவார்களாக. மேலும் ஒருதேவஸ்தானம் நல்லஸ்திதியில் இல்லாமற் பூஜை முதலானவைகள் வேதாகமவிதிப்படி சரியாக நடைபெறுமற்போனல், அந்தப் பாபகர்மத்திற்கு தேவஸ்தான அதிகாரிகள் உத்தரவாதப்படுகிறது மல்லாமல், அத்தேவஸ்தானமிருக்குமூரார்களும் பாத்தியஸ்தர்களாவார்கள். அப்பாபம் அவர்களையும் பீடிக்கும். அதை விலக்கமுடியாது. அதனல் தேவஸ்தான கைங்கரியங்கள் நேர்மையாய் நடைபெறும்வண்ணம் ஒவ்வொருவரும் அக்கரையுள்ளவர்களாக இருக்கவேண்டும். பூஜைக்கிரமத்தில் ஏதேனும் வழுக்கள் குற்றங்கள் தெரியவந்தால், அத்தேவஸ்தானங்களுக்கு நேர் சம்பந்தமான அதிகாரிகளிடத்தில் முறையிடல் வேண்டும். அது பலிக்காமற்போனல் டிஸ்ட்டிரிக்டு கோர்ட்டில் மனு மூலமாய் முறையிடவேண்டும். தினப்பத்திரிகைகளில் பிரசுரஞ் செய்யவேண்டும். இப்படிச்செய்து வந்தால் தேவஸ்தான கைங்கரியங்கள் நன்றாய் நடக்கும். தேவஸ்தான விஷயங்களைப்பற்றிச் சீர்திருத்தப்புகும் முறையில் தாக்ஷண்யமில்

லாமலும் சுயநயம் பாராட்டாமலும், நடு நிலைமையினின்றும் ஒவ்வொரு ஜில்லாவிலும் நாலு பெயர்கள் நல்ல மனிதர்கள் முயற்சிப்பார்களேயாகில், இனிச் சொற்பகாலத்திற்குள், தேவஸ்தானங்களின் விசாரணை நேர்மைப்படும். அதனால், ஈசுவர ஆராதனைகள் சரியாய் நிகழும். அதனால், சனங்களுக்கு நன்மையுண்டாகும்.

7. தேவஸ்தானங்களின் விசாரணை நேர்மையாகநடைபெறும் பொருட்டு அவைகளின் க்ஷேமத்தையே கவனிப்பதற்காக ஒரு சபை யிருந்தால் நலமெனக்கருதி சில புத்திமான்கள் ஒரு சபையை சென்னையில் மயிலாப்பூரில் 1907-ஹ பிப்ரவரி-மீ 7உ ஸ்தாபித்திருக்கிறார்கள். அது மேற்படி ஹ மார்ச்சுமீ 5உ இந்திய கவர்ன்மெண்டு 1860-ஹத்திய 21-ம் சட்டவிதி முறைப்படி ரிஜிஸ்டர் செய்யப்பெற்றிருக்கிறது. அச்சபையின் முக்கியமான நோக்கங்களாவன:—

1. இச்சபையின் பெயர் தர்மரக்ஷணசபை.

2. இச்சபையை ஏற்படுத்தியதின் கருத்துக்களாவன :—

(a) ஹிந்துமத சம்பந்தமான தேவஸ்தானங்கள், கட்டளைகள், மடங்கள், சத்திரங்கள் மற்றுமுள்ள ஹிந்து சம்பந்தமானவும் அல்லது பொதுவாய் தர்மத்துக்குரித்தான இதர ஆதீனங்களுடையவும் சொத்துக்களை பாதுகாத்தல், அவைகளை அபிவிருத்திசெய்தல்.

(b) மேற்கண்ட தர்மங்களுக்கு ஏற்பட்டுள்ள சொத்துக்களையும், திரவியங்களையும் அந்தந்த தர்மங்களின் பிரயோஜனத்திற்காக வினியோகித்துவரும்படி செய்வித்தல்.

(c) அந்தந்த தர்மங்களின் நோக்கங்களுக்கு விரோதமின்றி வேறு ஹிந்துமத சம்பந்தமான இதர தர்மகாரியங்களுக்கு முன்குறித்த தர்மங்களுக்கு ஏற்பட்ட பணங்களை உபயோகமாகும்படி செய்வித்தல்.

(d) ஹிந்துமதம், தத்வசாஸ்திரம், தர்மசாஸ்திரம், ஆகம சாஸ்திரம் முதலானவைகளை அபிவிருத்திசெய்தல்.

(e) ஹிந்துமதப்பொதுவான தர்மங்களையும் அவைகள் சம்பந்தமான ஆலயங்களையும், மேற்பார்த்தல்.

(*f*) மேற்கண்ட தர்மங்களையும், ஆலயங்களையும், அவைகளின் கருத்துக்களையும், கொண்டு செலுத்த ஏற்பட்டுள்ள சட்டங்களில் அனுகூலமானவும் அவசியமானவுமான மாறுதல்களை உண்டுபண்ணுவித்துக்கொள்ளுதல்.

(*g*) மேலும், மேற்கண்ட கருத்துக்கள் நேர்மையாய் நடைபெறும்படியாய் அவசியமான மற்றக்காரியங்களைச்செய்வித்தல் முதலியனவுமாம்.

பொதுச் சபையின் ஒவ்வொரு அங்கத்தினரும் வருஷம் தோறும் ரூ. 3 சந்தா முன்பணமாகக் கொடுத்துவரவேண்டும். அல்லது ஒரேமொத்தமாக ரூ. 50 கொடுத்துவிடலாம்.

ஹிந்துமத தேவஸ்தானங்களிலும் மற்றைய பொது தர்மங்களிலும் அபிமானமுள்ளவர்கள் இச்சபையிற் சேரவேண்டுவது ஆவசியகமானதாக இருக்கிறது. பலரும் சேர்ந்து, செல்வாக்கினாலும் திரவிய சகாயத்தினாலும், முயற்சியினாலும், இச்சபையை ஆதரிப்பார்களாகில் இச்சபை மேன்மைபெறும். பெறவே—இச்சபையின் மூலமாக, தேவஸ்தானங்கள் முன்போல நல்லஸ்திதிக்குவரும் என்பதிற் சந்தேகமில்லை. இது நல்லகாலம். நல்ல காரியம் ஒவ்வொன்றுக்கும் மஹான்களுடைய பூர்ண கிருபை இருக்கிறது. நம் முயற்சி மாத்திரம் வேண்டும். முயற்சி திருவினையாக்கும். எல்லாம் வல்ல கடவுளின் அருட்பிரசாதம் இம்முயற்சிக்கு இருப்பதாக.

ப. நாராயணன்.

ஓம்தத்சத்.

## ஸ்ரீமத் சங்கராச்சாரிய சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்.

நம்தேசத்தில் நமக்குப்பெரும்பாக்கியமாகக் கிடைத்தவைகளில் மஹா முக்கியமான சம்பத்து, வேதங்கள். இவைகள் கர்ம காண்டமென்றும், ஞானகாண்டமென்றும் இரண்டாகப் பிரிகின்றன. கர்மகாண்டம் ஞானத்திற்குச் சாதனமேயன்றி தனிப்பட முக்கியமன்று. அப்படி அறியாமல், கர்மகாண்டமே பரமபுருஷார்த்தத்தைத் தரும் என்று எண்ணினவர்களாய் சுவர்லோக ஐசுவரியங்களில் ஆசையுள்ளவர்களாய், கர்மங்களை நானாவிதமாக வளர்த்து விஸ்தரித்து, அவைகளின் பலன்களில் மயக்கங் கொண்டு, பலவாறான கர்மங்களை நம்மவர்கள் செய்து வந்தார்கள்.

"அஹிம்ஸா பரமோதர்ம:" என்ற ஒப்புயர்வற்ற ஞானஉபதேசத்தையும் கூட முற்றும்மறந்தார்கள். ஜீவகாருண்ணியத்தை இழந்தார்கள். "தர்மங்குன்றவும் அதர்மம் மேலிடவும், நான் அவதாரம் செய்வேன். அதர்மத்தைத்தொலைப்பேன். தர்மத்தை நாட்டுவேன்" என்று கீதையில் ஸ்ரீகிருஷ்ணபகவான் அருளியபடி "தன்னுயிர் ஓம்பான் பிறவுயிர் ஓம்பும் மன்னனை" பகவான் கௌதமபுத்தர் அவதாரம் செய்தார். பல இடங்கள் தோறும் சென்று ஜீவகாருண்ணியத்தின் மகிமையை திரும்பவும் நம்மவர்களுக்கு அறிவுறுத்தி வந்தார். இதனால், யாகங்களின் கொடுமை குன்றியது. யாகங்களும் வரவர குறைவுபட்டன. கர்மகாண்டம் வரம்புக்குட்பட்டு நடைபெற்றது, அதன் அனுஷ்டானமும் முற்றும் கடைமுறையில் அற்றுப்போயிற்று. போகவே, வேதத்தில் ஜனங்களுக்கு பொதுவாய் நம்பிக்கையும் குன்றியது. நாஸ்திகமதம் தலைப்பட்டது. புத்தரின் உயர்ந்த ஞானமுறைகளை சாதாரண ஜனங்கள் அனுஷ்டிக்க அனர்களாகிவிட்டார்கள். துர்தேவதைகளின் ஆராதனைகள் தலைப்பட்டன. முன்னரைவிட ஒழுங்கின்மாக, பலவிதமான பலிகளும் அதனால் ஜீவஹிம்சையும் விஸ்தாரமாகப் பரவின. தர்மம் தாழ்ந்தது. அதர்மம் மறுபடியும் உயர்ந்தது. தேசம் அஞ்ஞான இருளால் மூடப்பெற்றது. வெவ்வேறான துராசாரங்களும், அவைகளைப் போதிக்கின்ற துர்மதங்களும் உண்டாயின. இத்துராசாரங்களையும் இத்துர்மதங்களையும் தொலைத்துவிடவும், வேதத்தில் திரும்பவும் நன்னம்பிக்கை உண்டாக்கவும் ஞானமார்க்கத்தை ஸ்தாபிக்கவும்,

பகவான் ஸ்ரீமத் சங்கராச்சாரியஸ்வாமிகள் அவதாரமாயினர். கர்ம மார்க்கம் சொற்பபிரயோஜனமானதென்றும், மனமென்ற பூமியை மூடிக்கொண்டிருந்த தியவழக்கங்கள், தீயபாவங்கள் என்ற களைகளை உழுவதுமூலமாகப்பிடுங்கி வேரோடுஅறுத்து எறிவதுமாத்திரம்தான் கர்மமார்க்கத்தின் உபயோகம் என்றும், அதன்மேல் ஞானமார்க்கம் என்ற வித்து இனிப்போட வேண்டுமென்றும், ஞான நெறியே மோக்ஷத்திற்கு பரம சாதகமென்றும், உபதேசித்தார். அவர் இந்த பரதகண்ட முழுமையும் சுற்றி ஆங்காங்குள்ள பல துன்மார்க்கங்களை வாதப்போரில் வென்று, பலவிடம் சென்று ஞான திக்குவிஜயம் செய்துவந்தார். வர்ணாச்சிரமங்கள்சிதறிக்கிடந்ததலை, ஒழுங்காக மறுபடி ஸ்தாபித்தார். ஆறுவைதிக மதங்களைத் திரும்பவும் நிலைநாட்டினார். அநேக அற்புதக்காக்ஷிகள் காட்டினார். அநேக சித்திகள் செய்தார். மனிதவயதில் 32 வயசுவரை பூமியில் இருந்தார், பின்பு பத்திரிகாச்சிரமத்தில் ஒருகுகையில் தாம் மாத்திரம், ஜீவனுடன் பிரவேசித்தார்; பின்பு திரும்பவில்லை. அவர் மரணமானதாகத் தெரியவில்லை.

ஸ்ரீமத் சங்கராச்சாரியார் அவதாரமான காலத்தைப்பற்றி பல அபிப்பிராயங்கள் உள்ளன. பகவான் கவுதம புத்தர் இற்றைக்கு 2500 வருஷங்களுக்கு முன்னர் இருந்தார். சிலர் அபிப்பிராயத்தில், பகவான் கவுதமர் நிர்வாணம் பெற்று ஸ்தூலசரீரத்தை நீத்த காலத்திற்கு 80 வருஷங்களுக்குப்பின்னர், ஸ்ரீமத் ஆசாரியார் அவர்கள் அவதாரம் ஏற்பட்டதென்றும், கி. பி. 788 வூத்தில் என்று சிலரும், கி. பி. 600ல் என்று வித்வான் திலங்கரும் கி. பி. 590 என்று வித்வான் பாஷியாசாரியரும், கி. மு. 140 அல்லது 150 என்று வித்வான் டி. சுப்பாராவ் என்பாரும், இவ்விதம் பலவாறாக அபிப்பிராய பேதங்கள் கூறியிருக்கின்றனர்.

இம்மஹான், சூக்ஷமமான திவ்யசரீரத்துடன், ஹிமாசலத்தின் வடபாகத்தில் ஷம்பாலா என்ற க்ஷேத்திரத்தின் கண்ணுள்ள வெள்ளியம்பலத்திற்கு ஞான அருள்வள்ளலாக விளங்கிக்கொண்டிருக்கிறார் என்று, ஹெலினாம்பள் அம்மையார் (HPB) சொல்லியிருக்கிறார்.

அங்கமாலி என்ற ரயில்வேஸ்டேஷனுக்கு 5 மயில் தூரத்திலுள்ள காலடி என்ற க்ஷேத்திரத்தில், சிவகுரு என்ற பிராமணோத்தமர்க்கும், ஆரியம்பாள் என்ற பிராமணோத்தமிக்கும், வைகாசிமீ சுக்கிலபக்ஷபஞ்சமிதிதியில், ஸ்ரீமத் சங்கராசாரியார் அவதாரமானர். இக்குழந்தையின் முகத்தில் ஓஜஸ், தேஜஸ், பிரஹ்மவர்சஸ் ஜ்வலித்துக்கொண்டிருந்தது. பெற்றோர் தவத்தாற்கிடைத்த பாக்கியம் இது. எல்லாராலும் மஹிமைப்படுத்தப்பெற்றது. 3-ம் வயதில் பிதா இறந்துபோய்விட்டார். மாதாவே அன்புடன் வளர்த்துவந்தார். 5-ம்வயதில் உபநயந ஸம்ஸ்காரம் பிராஹ்மண குலஆசாரப்படி நடந்தது. அதின்மேல் 8-வயதுக்குள், படிக்கவேண்டுவன எல்லாம் படித்துவிட்டார். வேதங்கள், உபநிஷத்துக்கள், ஸ்மிருதி, ஹிதிகாச புராணாதிகளெல்லாம் பழையபாடமானவையாக அவருக்குத்தோன்றின. பின்பு சரியான வயசுவர, அவர் தாயார் விவாஹ விஷயத்தில் பிரயத்தனம் செய்தார். இவர் சன்னியாச ஆச்சிரமம் பூணவேண்டுமென முயன்றார். இல்லறம் புகவேண்டுமென்று தாயாரும், துறவறம்புகவேண்டுமென்று புதல்வரும், இவ்விதமாக ஒருவர் மற்றொருவர் சம்மதத்தை நாடிக்கொண்டிருந்தனர். இச்சமயத்தில் அவர் இருக்கும் ஊருக்கு சமீபத்தில் ஒரு நதியில், இருவரும் ஸ்நானம் செய்யப்போனார்கள். பிரவாகம் அதிகமாக இருந்தது. அதில் ஸ்நானம் செய்ய இறங்கினர். ஆழத்தில் போய்விட்டார். அங்கு ஒரு முதலை இவரை இழுத்தது. இழுக்கவே" இப்போதாவது எனக்கு ஸந்நியாசம் பெற அனுமதி கொடுக்கவேண்டும், அப்படிக்கொடுத்தால் ஒருகால் பிழைத்தாலும் பிழைப்பேன்" என்று கரையில் நின்ற தாயாரை வருந்திப்பிரார்த்தித்தார். வருத்தப்படும் இந்நிலையைப்பார்த்து வருந்தி "அப்படியே ஆகுக" என்று தாயார் சம்மதிக்கவே, முதலையும் இவரைவிட்டு விலகியது. சங்கரர் ஆனந்தம்பெற்றவரானர். அக்காலத்தில் தான் "ஜோதிஷாம் ஜோதி:" என்ற பரமசிவனின் ஒருபொறி இவருடைய சரீரத்தில் இறங்கியது. இவர் உடலை உறைவிடமாகக் கொண்டது. அப்போதுஇவருக்கு வயசு 13. ஸ்தூல சூக்ஷ்ம, சரீரங்களில், அவருடைய சூக்ஷ்ம சரீரத்தின்மூலமாக, பகவான் சங்கரர்க்கும் பகவான் கவுதமபுத்தருக்கும் சம்பந்தம் இருக்கிறதாக (HPB அம்மாளின்) குப்தசாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. சங்கரர்

என்ற மஹா புருஷன் அவதாரம் ஆகவேண்டுமானால் மஹா பரிசுத்தமான சூக்ஷ்மசரீரமாகத்தான் இருத்தல்வேண்டும். சமீபகாலத்தில் நிர்வாணம்பெற்றுப்போன, கவுதமரின் சூக்ஷ்மசரீரம்சிதையாமல் இருந்ததென்றும், அதுவே இந்த திராவிட பிராஹ்மண உத்தம குழந்தையின் சூக்ஷ்மசரீரமாக அமைந்ததென்றும், அப்புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறது. மஹாதேவரின் ஒரு நேரான ஜோதிஸ்படமே, இம்மஹா புருஷன் மஹாதேவரின் அவதாரமாகவே ஆயினார். அதன்மேல் இவருடைய மஹிமையும் சக்திகளும் சித்திகளும் மேன்மேலும் தெற்றெனவே பிரகாசித்தன.

மானசிக சந்நியாசம் பூண்டு, தாயாரிடம் அனுமதிபெற்று, சாஸ்திரக் கிரமப்படி, ஒருபெரிய குருவினிடம் நேரில் ஆச்சிரமம் பெறக்கருதி, வடக்கு நோக்கி யாத்திரையாகப் புறப்பட்டார். மாண்டூக்கிய உபநிஷத்துக் காரிகையைச் செய்திருக்கிற பகவான் ஸ்ரீமத் கௌட பாதாச்சாரியாரின் முக்கியசிஷ்யரான ஸ்ரீமத் கோவிந்த பகவத் பாதரிடம் சென்று உபதேசம் பெற்றார். அவர் ஹிமயமலையின்சார்பிலுள்ள பத்திரிகாச்சிரமத்தில் தபஸ் செய்துகொண்டிருந்தார். அவருடன் சிலகாலம் சங்கரர்வாசம்செய்து வந்தார். பின்பு உலகயாத்திரையாகப் புறப்பட்டார். அநேகர் சிஷ்யர்களாக இவரை வந்துசேர்ந்தார்கள். மண்டன மீசுரர் என்றவர் கர்மகாண்டத்தின் பெருமையைக் கொண்டாடிக் கொண்டிருந்தார். அவரை வாதில் வென்றும், ஞானமார்க்கம், முக்கியமாக அத்துவைதமார்க்கம், உயர்வறஉயர்நலமுடையதென்றும், ஸ்தாபித்தார். அவரைத் தம்முடைய முக்கிய சிஷ்யராக ஆக்கிக்கொண்டார். இவரே, பின்பு ஸுரேசுவராசாரியர் எனப் பிரஸித்தம்பெற்றவர். இவரைத்தவிர இன்னும் மூன்று முக்கிய சிஷ்யர்கள் உண்டு. பத்மபாதர், அஸ்தாமலகர், தோடகர் என்பவர்களாம். ஸ்ரீமத் சங்கராசாரியார், பத்திரிகை, துவாரகை ஜகந்நாதம் அல்லது, பூரி, சிரங்கேரி என்ற 4 இடங்களில் 4 மடங்களை ஸ்தாபித்து இந்நாலிடங்களிலும், தம்முடைய நாலு சிஷ்யர்களையும் தனித்தனி வைத்து, தம்மால் ஸித்தாந்தப்படுத்தப் பெற்ற அத்துவைத மதத்தைப் பரவச்செய்யும்படி ஏற்பாடு செய்தார், ஸ்ரீமத் சங்கராசாரியார் அவர்கள் செய்த நூல்கள் பல. முக்கியமாய்,

| | |
|---|---|
| சிவாநந்தலஹரி | மனீஷாபஞ்சகம் |
| ஆநந்தலஹரி | தசசுலோகி |
| விவேகசூடாமணி | சதசுலோகி |
| ஆத்மபோதம் | விஷ்ணுசஹஸ்ரநாமபாஷ்யம் |
| திருச்திர்சய விவேகம் | பஜகோவிந்தம் |
| அபரோக்ஷாஅநுபூதி | பலஸ்தோத்திரங்கள் |
| தக்ஷிணாமூர்த்திஸ்தோத்திரம் | |

இன்னும் சிறு சிறு ஞானப் புஸ்தகங்களையும் அருளிச்செய்தார்கள். அவர்கள் செய்த கிரந்தங்களில், உபநிஷத்பாஷியம், சூத்திர பாஷியம், என்னும் இரண்டுமே மிகச்சிறந்தவை. பூர்வபக்ஷம் சித்தாந்தம், என்ற முறையாக, மஹா நுட்ப பிரஞ்ஞையுள்ளவைகளாக இவை நடைபெறுகின்றன. ஆசாரியார் அவர்களின் பிரகரணங்களால் அத்துவைதமதம் ஸித்தாந்திக்கப் பெற்று இருந்தபோதிலும், வேதங்களின் சாரமான உபநிஷத்துகளின் உட்கருத்து அத்துவைதமென்று உறுதிப்படுத்துமாறு, தாமே, பாஷ்யங்கள் இயற்றினர். அவை மூலமாக உலகம் பெருமையும் ஞானமும் பெற வேண்டு மென்பது, அம்மஹான் அந்தரங்கமான அபிப்பிராயம் எனத்தோன்றுகிறது' நம்தேசத்தில், ஆதி முதல், இதுவரை, ஞான மார்க்கத்தொடர்பு அறுதலைதைலதாரைபோல், ஞானவெள்ளம் எப்போதும் பெருகிக்கொண்டு வந்திருக்கின்றதுஎன்பதைக் காட்டும்வண்ணமே, இவ்வுபநிஷத்துக்களின் பாஷியங்கள்செய்தார் போலும், எனத் தோன்றுகிறது. மேலும், பௌத்ததர்மங்களின் கண்ணுள்ள ஞானவிஷயங்கள் புதுமையன்று எனவும், முன்னரே வேத உபநிஷத்துக்களில் ரிஷிகளால் கண்டறிந்தவைகள் எனவும் காண்பித்தார்.

இம்மஹா புருஷன் உலக க்ஷேமத்தின் பொருட்டு, இன்னும் உலகசம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கின்றார். அவர் வழிப்பட்ட நாம், எல்லாரும் ஞானம் சீலம் ஒழுக்கம் இவைகளில் நலம் பெறுவோமாகில், அவர்கள் அநுக்கிரகம் பெறுகிறதும் தவிர அவர்களின் நேரான அவதாரமும் நேர்வதாகும். அதற்கு நாம் பாத்திரவான்கள் ஆகக்கடவோம். இம்மஹானால் ஸ்தாபிக்கப்பெற்ற மடாலயங்கள் இப்போது அவ்வளவு நல்ல ஸ்திதியில் இல்லை.

அவைகளின்மடாதிபதிகளும், அம்மடங்களிலுள்ளவர்களும், சிறுமையான எண்ணங்களைவிட்டு, பெருமையாக நடைபெறுவார்களாக! இக்காலத்தின் ஸ்திதியை உணர்ந்து, அதற்குத் தகுந்தபடி, ஞானமுறைகள், எவ்விதம் ஜனங்களுக்குக் கற்பிக்க வேண்டுமோ, அவ்விதம் கற்பித்து நடப்பார்களாக!

பிரகிருதத்தில் ஸ்ரீங்கேரி மடத்தில் இருக்கின்ற ஸ்ரீ சிவாபிநவ நரசிஹ்மபாரதி என்னும் நாமம் பெற்று விளங்கும், ஸ்ரீமத் சங்கராச்சாரியஸ்வாமிகள் வேதாந்தமுதலியசாஸ்திரங்களில் மஹாபிரஞ்ஞை உள்ளவர்கள். பொதுநன்மை நாடியவர்கள். வித்வான்களை ஆதரிக்கின்றவர்கள். ஈசுவரகடாக்ஷம் பெற்றவர்கள். நல்லயோகசித்தி பெற்றவர்கள். இவர்கள் ஆதி சங்கரரின் அவதாரக்ஷேத்திரமாகிய ஷை காலடி க்ஷேத்திரத்தில், ஆதி ஸ்ரீமத் சங்கராச்சாரிய ஸ்வாமிகளின் விக்கிரகம் ஒன்றும், சாரதாம்பாள் என்ற தேவி விக்கிரகம் ஒன்றும், ஆக இரண்டு விக்கிரகங்களுக்கும், இரண்டு கோவில்கள் நிர்மாணம் செய்வித்து, அவைகளின்கண் சென்ற பிப்பிரவரிமீ 21உ திங்கட்கிழமை ஷை விக்கிரகங்களை வேதாகம சாஸ்திரங்களின் முறைப்படி பிரதிஷ்டை செய்வித்தார்கள். இது ஒரு பெரும் புண்ணியம். இப்பிரதிஷ்டாவிஷயங்கள் அதிக விமரிசையாக நடந்தன. இனி நம் தேசத்திற்கு நற்காலம் வரும்என்பதற்கும், ஞானம் அபிவிர்த்தியாகும் என்பதற்கும் இந்தப்பிரதிஷ்டா விஷயம் நல்லசூசனையானது. வரப்போகின்றதெய்வசம்பத்திற்கு முன்னறிகுறியாம். இனிமேல், இந்தக்ஷேத்திரத்தில் ஒருவித்தியாசாலை ஏற்படவேண்டும். புத்தகசாலைஅமையவேண்டும். இவ்விடமிருந்து ஞானசாரியர்கள் பல இடங்களுக்கும்போய் பிரஸங்கம் செய்யும்படி உண்டாகவேண்டும். இத்திவ்யதேசத்தில் ஆதி சங்கரரின் அருள் திரும்பவும் பிரகாசிக்கும். அவர் அனுக்கிரகம் இனி உண்டாகும். ஜனங்களுக்குள் ஞானப்பியாசம் அதிகமாகப்பரவவேண்டும். இனி என்மதம் உயர்வு, உன்மதம் தாழ்வு என்ற மதச்செருக்குக்குறையவேண்டும். மதத் துவேஷங்கள் குன்றவேண்டும். அவர் அவர் கர்மபலப்படியாக, பெற்று அனுஷ்டிக்கின்ற மதத்தின் உண்மைகளை நன்கு உணர்ந்து அதன்மேல், ஞானவழிகண்டு மதச் செருக்குக் கொள்ளாமலும், எல்லா மதங்களும் ஈசுவரனிடம் கொண்டுபோகும் பலவழிகள் என்று அறிந்து, பொறுமையைப் பாராட்டுவார்களாக.

ஓம்தத்ஸத்

ப. நாராயணன்.

கணேசாய நம:

## கணபதியும், அவருடைய உண்மையும்.

காசி முதல் கன்னியாகுமரிவரை எங்கே போனாலும் இந்தியா தேசமுழுவதிலும், கணபதி என்ற தேவரின் ஆராதனை இருந்துகொண்டுவருகிறது. சிவன் கோவிலிலும், விஷ்ணுகோவிலிலும், ஊருணிக்கரையிலும், மரத்தடிகளிலும, வீதிமூலைகளிலும், கிராமமுகப்பிலும், காலாங்கரைகளிலும், எந்த எந்த இடங்களில் ஜனங்கள் சந்திப்பார்களோ, அவ்விடங்களிலெல்லாம் இத்தேவரின் மூர்த்தியைப் பார்க்கலாம். கருங்கல், வெள்ளைக்கல், மரம், உலோகங்கள், குயவன் பாண்டம், இவைகளால், இம்மூர்த்தியின் விக்கிரகங்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன.

2. இந்திய வித்வான்கள் இவருக்குமுதல் முதலில் மங்களாசரணமாக ஒருசெய்யுள் மூலமாகவேனும் வணங்கிப்பின்பு தாம் எடுத்துக்கொண்ட விஷயத்தைப்பிரஸ்தாபிப்பார்கள். நற்காரியம் என்ன செய்தாலும், ஆரம்பத்தில் இம்மூர்த்தி ஆராதனை இன்றி அமையாது. எக்காரியத்தைச்செய்யப்புகினும், பிராணாயாமம் இன்றி, வேதத்தை முதல் நூலாகக்கொண்ட ஒருவனும் செய்யான், பிராணாயாமம் என்பதே கணபதி உபாஸனை என்பார் அறிஞர்கள்.

3. முன் சொன்ன நிறைந்த வடிவான, விக்கிரகங்கள் இல்லாவிடினும், மஞ்சள், சந்தனம், பசுவின் சாணம், இத்திரவியங்களைக் கொண்டு, சுருக்கமாய் ஒருஉருண்டைபிடித்துவைத்துக் கணபதியாகப்பிரதிஷ்டைபடுத்தி, பின்பு அதை அவராகப்பாவித்து, பூஜை முதலியவை செய்வார்கள். இந்த மூர்த்தியாகக்கடவுளை ஆராதனை செய்தல், நம்தேசமுழுமையும் பரவியுள்ளது.

இவருக்கு விக்கினேஸ்வரர் என்றும், கஜாநநன் என்றும் பெயர்கள் உண்டு. கணபதி ஸஹஸ்ரநாமம் என்ற ஆயிரம் பெயர்கள் உண்டு. அவைகளுள் மேற் குறித்தவை சாதாரணமாக வழங்குகின்றன.

அவருடைய உபாசனையின் மீது, அவர் அநுக்கிரஹம் பெற்ற பின்புதான், காரியங்கள் சித்தியாகும் என்று, பொதுஜன அபிப்பிராயம், சாஸ்திரத்தின் துணிபும் அதுவே.

4. பரமசிவனுடையவும், பராசக்தியினுடையவும் மூத்தகுமாரர் எனவும், பரமசிவனும், பராசக்தியும் ஒரு கண்ணடியில், ஒரே சமயத்தில் நோக்கினபோது, அவ்விரு மூர்த்திகளின் சாயை ஒன்றின்மேல் ஒன்றாய்ப்படவே, கணபதி என்ற மூர்த்தி ஆவிர்ப்பவித்தது என்று, ஒரு புராணத்திற் சொல்லியிருக்கிறது. இம்மூர்த்தியைப்பற்றி ஒரு உபநிஷத்தும், ஒரு பெரிய உபபுராணமும் உள்ளன. இம்மூர்த்தியை ஆராதித்து, மோக்ஷ சாம்பிராஜ்ஜியம் பெற்றவர்களையும் மூர்த்தியின் விசேஷத்தையும் பற்றியும், பின்னும் மற்றவைகளைப்பற்றியும், இப்புராணத்தில் விஸ்தாரமாகச்சொல்லியிருக்கின்றன.

மலையாளம் முதலான, மேற்கு நாடுகளில், சிறுவர்களும் சிறுமிகளும் அக்ஷராப்பியாஸம் ஆரம்பித்தால், "ஓம் கணேசாயநம:" என்ற அக்ஷரங்களை எழுதி முதல் முதலில் மாணாக்கனுக்குக் கற்றுக்கொடுக்கிறது வழக்கம். கீழ் நாடுகளில் "ஓம் நமோ நாராயண சித்தம்" என்ற அக்ஷரங்களை எழுதி முதல் முதல், மாணாக்கருக்குக் கற்றுக்கொடுக்கிறது வழக்கம்.

5. இவ்வளவு பிரபலமாகவும், எல்லாராலும் ஆராதிக்கப்படுபவராகவும் இருக்கின்ற இம்மூர்த்தியின் தத்துவத்தை விசாரிக்க உத்தேசிக்கிறோம். இந்த விசாரணையின் பிரயோஜனம் என்னவென்றால், ஹிந்துமதத்தின் உண்மைகளை அறியாதார், இம்மூர்த்தியின் ரூபத்தைப்பார்த்துப் பகடி பண்ணுகிறார்கள். அதனால், நம் இளைஞர்கள் மனத்தில், இம்மூர்த்தியின்மேலுள்ள பக்திக்குக் குறைவு உண்டாக இடமாகிறது. பின் வரும் தத்துவத்தை நம்மவர் உணர்ந்தால், அப்பக்திக்குக் குறைவு உண்டாகாமல் தடுக்க ஹேதுவாய் இருப்பதுமன்றி, அம்மூர்த்தியின் ஆராதனை பலவத்தாயும் பிரயோஜனகரமாகவும் அமையும். திருமூலர் அருளிச்செய்திருக்கிற பாசுரம் இங்கு கவனிக்கத்தக்கது.

"தத்துவம் எங்குண்டு தத்துவன் அங்குண்டு
தத்துவம் எங்கில்லை, தத்துவன் அங்கில்லை
தத்துவ ஞானத்தின் தன்மை அறிந்தபின்
தத்துவன் அங்கே தலைப்படுவான் தானே"

6. கணபதி என்ற பதத்திற்கு அர்த்தம் என்ன? கணங்களின் பதி. அதாவது-கணங்கள் என்றால், வேற்றுமையான நாம ரூபங்கள். பதி என்றால் எஜமானன். நாமரூபப்பிரபஞ்சத்திற்குப்பதி. நாம ரூபங்களுக்கு, பீஜமாக இருக்கும் பொருள். உலகத்தில் நாம் அறிகிறதெல்லாம் நாமம் ரூபம் என்பார் வேதாந்திகள். நாமம் என்றால் ஒவ்வொரு வஸ்துவினிடமும், அது அதன் அறிகுறியாக இயற்கையாக, ஏற்பட்டுள்ள தொனி, ஸ்வரம் என்பதாம். அந்தந்த வஸ்துவுக்குள்ள தொனி வேறுவேறாக உள்ளது. இந்தத் தொனிதான் நாதம் என்பது. அந்தந்த வஸ்து அமையப்பெற்றுள்ள அணுக்களின் சலத்தின், அதாவது ஸ்வரத்தின் (Vibrations) காரியம், இந்த தொனி அல்லது நாதம். இந்த நாதம் சூக்ஷ்மதசையில் "வியோமன்" என்று சொல்லப்படும் ஹிருதயாகாசத்தில், இருக்கிறதாக ஸ்வேதாஸ்வதரோ உபநிஷத் உபதேசிக்கின்றது. அதின் அதிஷ்டானமாக ஈசுவரன் இருக்கின்றார். மற்ற தேவர்கள் எல்லாம் அவ்வீசுவரனின் ஓர் ஓர் அம்சம். அதனால்தான் மந்திரங்களுக்கு; தேவன், ரிஷி, சந்தஸ் என்ற விவஸ்தைகள் உண்டு. தேவன், அந்தவியோமன் என்ற ஆகாசத்தின் ஒரு அலை; ரிஷி என்றால் அதை, சூக்ஷ்மமான மனக்கண்ணால் கண்டவர்; சந்தஸ்என்றால் அவ்வலையின் ஒரு நிலை. இதனால்தான் இவ்வுலகம் "வநூா தத்விஸ்தாரதா" என்றார் ஸ்ரீமத்சங்கராச்சாரியார். பிரஞ்ஞையே இவ்வுலகமாகப்பரிணமித்திருக்கிறது என்பது ஆன்றோர் அபிப்பிராயம். ஒரு உபமானத்தால் இந்த நுண்ணிய தத்துவத்தை ஒருவாறு அறியலாம். காற்றினால் நடைபெறும் (Organ) ஆர்கன் என்ற வாத்திய இயந்திரத்தால், பெரிய குழாயின் வழியாய் காற்று உட்புகுந்து, அது மேன்மேலும் பலவாறாய் சிறு சிறு குழாய்களின் வழியாய்ச் சென்று சென்று கடைமுறையில், நுண்ணிய மயிர்போன்ற, குழல்களில் பிரவேசித்து, காதுக்கு இனிமையான நாதங்களை உண்டு பண்ணுகிறதுபோல, ஈசுவரனின் சித்தத்தின் சலனமாகிய, சின்மாத்திரையானது பலநாமங்களாகத் தொனிக்கிறது. ஒவ்வொரு தொனியும் ஓர் ஓர் வஸ்துவின் கருவாம். கர்ண இந்திரியத்தால் அறியும்போது நாமம் என்றும், கண் இந்திரியத்தால் அறியும் போது ரூபம் என்றும்சொல்லுகிறோம். அணுக்களின் சலனம் ஒருமுகமாக அறியப்படும் போது நாதவடிவாகவும்; மற்றொரு

முகமாக அறியும்போது பிந்து வடிவாகவும் ஏற்படுகிறது. பிரபஞ்சம் "ஓம்" என்ற பிரணவத்தினின்று விஸ்தரித்தது என்று உபநிஷத்துக்கள் சொல்லுகின்றன. அதன் பொருள், அதன் அந்தர்யாமியான சக்தி கணபதி என்ற தேவர். கணபதிக்கு பிரணவப்பொருள் என்று ஒரு பெயருமுண்டு. "பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்". மாண்டூக்கிய உபநிஷத்தில், பிரணவத்தைப்பற்றிச்சொல்லும் முதல் மந்திரத்தில், நம்முன் தோன்றும்உலகம், யாவும் இறந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் இவைகளைத்தாண்டினநிலையான அகாலம், இவைஎல்லாம் பிரணவஸ்ருபமே, என்றுஉபதேசமுள்ளது.

7. விக்கிநேசுவரன்—என்றால், எல்லா விக்கிநங்களையும் அரிஷ்டங்களையும் போக்குகிறவர். நாம் உத்தேசிக்கும் ஒவ்வொரு காரியத்திற்கும், ஓர் ஓர் இடையூறு நேரிடும். அது வராமல் தடுக்கும் தன்மையது இம்மூர்த்தியின் அநுக்கிரகம். அதனால் தான் இம்மூர்த்தியை எக்கருமத்தின் முதன்மையிலும் ஆராதிக்கின்றார்கள்.

8. கஜாநநன், ஆனைமுகத்தோன், இவருக்கு இம்முகம் ஏற்படுவானேன்? புராண வரலாற்றை நீக்கி, உண்மையை விவரிப்போம். சரீரம் முழுவதும் மனிதரூபம், சிரசுமாத்திரம் யானை முகம். மனசு என்ற தத்துவமானது, யானையின், துதிக்கை போன்று, சஞ்சலமானது. ஒரு நிமிஷமும் ஓய்ந்திராது. "𑌚𑌞𑍍𑌚𑌲𑌂 𑌹𑌿 𑌮𑌨𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣" என்றான் அர்ச்சுனன். காற்றைப்பிடித்துக்கரகத்தில்அடைத்தாலும் அடைக்கலாம், மனத்தை அடக்குதல்கஷ்டமானது என்பது அறிவுள்ளார் எல்லாரும் அறிந்த விஷயம். இது பற்றி அன்றோ தாயுமான ஸ்வாமிகள் அடியில் வருமாறு சொல்லியிருக்கின்றார்.

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாங்
    கரடிவெம் புலிவாயையும்
கட்டலா மொருசிங்க முதுகின்மேற் கொள்ளலாங்
    கட்செவி யெடுத்தாட்டலாம்
வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்
    வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணம லுலகத் துலாவலாம்
    விண்ணவரை யேவல்கொளலாம்

சந்ததமு மிளமையொ டிருக்கலா மற்றொரு
 சரீரத்தி னும்புகுதலாம்

சலமே னடக்கலாங் கனன்மே லிருக்கலாந்
 தன்னிகரில் சித்திபெறலாம்

சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
 திறமரிது சத்தாகியென்

சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
 தேசோ மயானந்தமே.

9. மனத்துடன் சம்பந்தித்த இந்திரியங்களுக்கு யானைகள் என்று திருமூலர் உவமித்திருக்கின்றார். "ஆனைகள் ஐந்தும் அடக்கி அறிவு என்னும் ஞானத்திரியைக் கொளுவி, அதனுள் புக்கு ஊனை இருள் அறநோக்கும் ஒருவற்கு,வான் அகம் ஏறவழிஎளிதாமே." மனசுக்கும் யானைமுகத்திற்கும்உன்னமயான ஒருஒற்றுமையுண்டு. மனசு என்றதத்துவத்தின் ஸ்தூல உபாதி,யானைமஸ்தகங்கள்போன்ற இரண்டுமூளைகளும், அவைஇரண்டின் மத்தியினின்றுமுதுகுஎலும்பின் உட்பாகத்தில் யானையின் துதிக்கைபோன்று தொங்கும் நரம்புமாம். சிரசில், மண்டை ஓட்டை விலக்கிப் பார்த்தால், இரண்டு மூளைகள் தோன்றும். அவ்விரண்டின் மத்தியில் கீழ்நோக்காய் தொங்கும் வெள்ளைநரம்பு ஒன்று உண்டு; இது முதுகெலும்பின் 23-அல்லது 32 வளையங்களின் மத்தியில் ஊடுருவிப்போகும். முதுகெலும்பின் மத்தியில் உள்ள வளையங்களின் கோவைக்கு வீணைத்தண்டு என்று பெயர். இஃதை ஆலயங்களில் துவஜஸ்தம்பமாக பிரதிகப்படுத்தி யிருக்கிறார்கள்.

10. மனசு என்ற தத்துவம் ஆரியர்களிடம் தான் முதல் முதல் விகாசம் பெற ஆரம்பித்தது. முன்னிருந்த மனிதவர்க்கத்தினரிடம்அது குப்தமானகருவாக இருந்தது. ஆரியர்களிடம் அஃது அதிக அபிவிருத்தியை அடைந்துவருகிறது. மண்டை எவ்வளவுக்கு எவ்வளவு பெரிதோ, அவ்வளவுக்கு அவ்வளவு மூளை அதிகமாக இருக்கு மென்று அனுமானிக்கிறோம். அம்மூளை எவ்வளவுக்கெவ்வளவு பெரிதோ அவ்வளவுக்கவ்வளவு அறிவு அதாவது மனத்தின் சக்தி அதிகம் என்று மதிக்கிறோம். (மனிதனின் வமிசாவளியின்

உண்மை என்ற புஸ்தகத்தில் இதைப்பற்றி விஸ்தாரமாகக் கண்டு கொள்ளலாம்.) நானாவிதமான நாமரூபப் பிரபஞ்சத்தின் அனுபவமும் அறிவும் மனத்தின் காரியம். இப்பிரபஞ்ச விஷயங்களினால், மனதானது வேறு வேறாக பின்னபடுகிறது. இவ்விஷயங்கள் மனத்தில், பல அலைகளை உண்டுபண்ணுகின்றன. கணபதி உபாசனை என்றால் பிராணாயாமம் மூலமாக, வாசியை அடக்கி, அதன் மூலமாக, மனத்தில் அலைகள் எழும்பாமல் நிரோதம் செய்தல். மனது எங்குளதோ அங்கு பிராணன் உளது. மனது நின்றால், பிராணன் லயமாகும். அதனால், சாதாரணமாக யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளும் வண்ணம் திருமூலர் அடியில்வருமாறு உபதேசிக்கிறார்.

“ மன்மனம் எங்குண்டு வாயுவும் அங்குண்டு
மன்மனம் எங்கில்லை வாயுவும் அங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு
மன்மனத் துள்ளே மனோலய மாமே ”
பிராணன் மனத்தொடும் பேராது அடக்கிப்
பிராணன் இருக்கில் பிறப் பிறப்பில்லை
பிராணன் மடைமாறிப் பேச்சறி வித்துப்
பிராணன் நடைபேறு பெற்று உண்டீரே. திருமூலர்.

11. “யோகச் சித்தவிருத்தி நிரோதம்” என்றார் பகவான் பதஞ்சலி முனிவர். மனத்தின் அலை ஒடுங்க மனச்சாந்தம் பெறும். அதனால், மனத்தின் சக்தி சிதறாமல், ஒரு முகப்படும். ஒருமுகப்படவே சங்கற்பித்த காரியம் குறைவின்றி நிறைவேறும். அதனால் தான், பிராணாயாமம் செய்து, கணபதி உபாசனை செய்து, பின்பு, உத்தேசித்தகாரியத்தை சங்கல்பமூலமாக சிந்தனை கொள்ளுகிறோம். சிந்தனையே காரியமாகப் பரிணமிக்கிறது என்பது சாந்தோக்கிய உபநிஷத்தின் முடிபு. கணபதி உபாசனை என்ற உண்மையான, பிராணயாமம் செய்வோமாகில் நாம் சங்கல்பித்த காரியம் எல்லாம் கைகூடும். ஆனால்நாம் சாதாரணமாகச் செய்யும் ஆராதனை இதுவாம்.

" கைஒன்றுசெய்ய,விழிஒன்றுநாட,க்கருத்தோன்றுஎண்ணப்
பொய்ஒன்றுவஞ்சகநாஒன்றுபேச, ப்புலால்கமழும்
மெய்ஒன்றுசாரச்,செவிஒன்றுகேட்க,விரும்புமியான்
செய்கின்றபூஜை,எவ்வாறுகொள்வாய்வினைதீர்த்தவனே"

(பட்டினத்தடிகள்)

12. ஆதலான், மனத்தைச்சிதறவிடாமல், ஒரே லக்ஷியமாக வைத்துக்கொண்டு, கணபதி பூஜையும் விதிப்படி பிராணயாமமும் செய்திடில், அதனுல் மனத்தின் மௌனம் உண்டாகும். பின்பு நாம்கொண்டசங்கல்பம் உண்மையாக முடியும்.

இந்தப்பத்திரிகை சரியாயும் நேர்மையாயும், யாவருக்கும் பிரயோஜனமாகவும் நடை பெறும் வண்ணம் விக்கிநேசுவரராகிய கடவுளை வணங்குவாம்.

" ஐந்துகரத்தனை யானைமுகத்தனை
இந்தின்இளம்பிறைபோலும் எயிற்றனை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடிபோற்றுகின்றேனே"

திருமந்திரம்

ஓம்தத்ஸத்.

ப. நாராயணன்

---

## சமாசாரங்களின் சுருக்கம்.

---

1. கள்ளிக்கோட்டைபிரஹ்மஞானசபை.—சென்றமார்ச்சுமீ 26. 27. தேதிகளில் கள்ளிக்கோட்டையில், தெற்கு ஜில்லாக்களின் கண்ணுள்ள பிரஹ்ம ஞானக்கிளை சபைகளின் மஹாசபைகூடியது. நியூ ஜீலண்டினின்று இந்தியாவிற்கு வந்திருக்கும்மாது ஸ்ரீகிருஸ்டி அம்மாள் அக்கிராசனம்வகித்தார்கள். இவர் விவாக மில்லாத கன்னிகை. இவருக்கு சுமார் 40 வயதுக்கு மேல் இருக்கும். ஆழ்ந்த படிப்பும் அகன்ற அறிவுமுள்ளவர், பண்பும்பணிவுமுள்ளவர். தாம்வகித்த ஸ்தானத்திற்குரிய தர்மத்தை நன்கு கொண்டுசெலுத்தினர். எப்பொழுதும் புன்னகையும், மலர்ந்தமுகமும் அக்கிராசனத்திற்கு ஒரு வனப்பைக்கொடுத்தது. முதன்மையில், கணபதி ஸ்தோத்திரமாக சமஸ்கிருத சுலோகங்கள் ஒருபிராஹ்மண வித்துவானால் வாசிக்கப்பெற்றன. பின்பு ஜாமோரின் ராஜவம்ஸத்தினராகிய ஸ்ரீமான் யுவராஜாவானவிக்கிரமராஜா அவர்கள், பிரஹ்மஞானசபையைப் பற்றியும், ஞானசகோதரர்களின் நல்வரவைப் பற்றியும் சில உயர் நலம் அமைந்த ஸம்ஸ்கிருத சுலோகங்களை படித்தார்கள். பின்பு கள்ளிக்கோட்டைக்கிளைச்சபையின் அங்கத்தினரான எஸ். வயித்திநாதஅய்யர் அவர்கள் அழகான உபசாரவசனங்கள் சொன்னார்கள்.

பிரஹ்மஞான சபையின் பெருமையையும் கர்மத்தையும்பற்றி மாது ஸ்ரீ. கிருஸ்டி அம்மாள் விஸ்தாரமாக உபந்நியாசம் செய்தார். பென்ஷன் சப்ஜட்ஜி பிரஹ்ம ஸ்ரீ. ராமச்சந்திரராயர்அவர்கள், இந்த உத்தம சமயத்தின்முக்கியத்தைப்பற்றியும்,

திருவனந்தபுரம் ஹைக்கோர்டு பிரதம ஜட்ஜியாகிய பிரஹ்ம ஸ்ரீ. தி. சதாசிவய்யர் அவர்கள், பிரமாணங்களைப்பற்றியும், மதுரை ஹைக்கோர்டு வைக்கில் பிரஹ்ம ஸ்ரீ ப. நாராயண அய்யர் அவர்கள் "மார்க்கம் இருமுறையுள்ளது". என்பதைப்பற்றியும்,

ஓடி யூர் வைக்கில்மகா-ள-ள-ஸ்ரீ அ. ரங்கஸ்வாமி அய்யர் அவர்கள், "பிரஹ்மஞான சபையின் உயர் நலம்அமைந்த முறைகளைநம்முடைய தின அநுஷ்டானங்களுக்குக் கொண்டுவரவேண்டியதெவ்விதம்" என்பதைப்பற்றியும்.

எனங்குடி மகா-ா-ா-ஸ்ரீ ராமச்சந்திரநாயுடு அவர்கள் ஏகாதசி விரதத்தைப்பற்றி தமிழிலும்.

சேலம் மகா-ா-ா-ஸ்ரீ அ. அநந்தகிருஷ்ண அய்யர் அவர்கள். "ஹிந்து மதத்தில் மனச்சக்தியைப்பற்றியும்,"

பாலக்காடு மகா-ா-ா-ஸ்ரீ யம். கே. வேங்கடேஸ்வர அய்யர் அவர்கள் (ஹைகோர்டு வைக்கில்) புராணங்களின் பிரயோஜனத்தைப்பற்றியும்,

திருவநந்தபுரம் பிரஹ்ம ஸ்ரீ கே. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் B. A. "பகவான் கிருஷ்ணவதார மஹிமையை"ப்பற்றியும்,

மதுரை வக்கில் மகா-ா-ா-ஸ்ரீ வி. ராமச்சந்திரய்யர் அவர்கள் "தற்காலஸ்திதிக்கேற்ப கல்விப்பயிற்சி முறைகளை அனுஷ்டிக்க வேண்டும்" என்பதைப்பற்றியும்.

திருவநந்தபுரம் டி. முன்சிபு பிரஹ்ம ஸ்ரீ கல்யாணராமய்யர்அவர்கள் "ஞானிக்குரிய தகைமைகளைப்பற்றியும்,

பொன்னணி பிரஹ்ம ஸ்ரீ பி. வி. துரைஸ்வாமி அய்யர் "மனச்சித்திகளை" ப்பற்றியும்,

திருச்சூர் வக்கில் மகா-ா-ா-ஸ்ரீ கருணகர மேனன், "மந்திரங்களின் பெருமையைப்பற்றி" மலையாளபாஷையிலும்,

எனங்குடி மகா-ா-ா-ஸ்ரீ ராமச்சந்திரநாயுடுஅவர்கள் " மரணம் அதற்கு பின் ஜீவனின் கதியை" ப்பற்றியும்.

மதுரை வக்கில் பிரஹ்ம ஸ்ரீ ப. நாராயணஅய்யர் அவர்கள் " ஆலயங்களின் சீர் திருத்த முறைகளைப்பற்றி" தமிழிலும்.

திருவநந்தபுரம் ஹைக்கோர்டு வக்கில் பிரஹ்ம ஸ்ரீ K. G சேஷய்யர் அவர்கள் " மாணிக்கவாசகர் இருந்தகாலநிர்ணயத்தைப் பற்றியும்,"

செங்கல்பட்டு பிரஹ்மஸ்ரீ சி. நாராயணஸ்வாமி அய்யர் அவர்கள் "பிரச்நஉபநிஷத்தின்" தாத்பரியத்தைப்பற்றியும்,

கள்ளிக்கோட்டை ஜாமொரின் கலாசாலை பிரதம உபாத்தியாயரான Reverend E. B. ஹில் என்பார் "கிறிஸ்து மார்க்கம்அதன் கண்முன்னிருந்த ஞானதத்துவ முறைகளைத்திரும்பவும்அனுஷ்டிக்க யத்தனப்பட்டு வருகிறது." என்பதைப்பற்றியும் கள்ளிக்கோட்டை வக்கீல், மகா-ா-ா-ஸ்ரீ. மான்ஜுபரி- ராமையர் அவர்கள்"மஹா தேவருடைய புத்திரர் களைப்பற்றியும்" அக்கிராசனதிபதிகிருஸ்டி அம்மாள் " சரீரத்தின் கண்ணுள்ள ஆதாரங்களைப்பற்றியும்" உபந்நியாசங்கள் செய்தார்கள். ஆங்காங்கு குறிப்பிட்டவைகளைத்தவிர மற்ற உபந்நியாசங்கள் ஆங்கில பாஷையில் செய்யப்பட்டன. 27உ இரவில் ஸூக்ஷ்ம தேகங்களைப்பற்றியும் விண்மண்டலத்தின் கிரகங்கள் நக்ஷத்திராதிபதிகளை ப்பற்றியும் பூதக்கண்ணுடி மூலமாய்ப் புகைப்படக்காட்சியை மதுரை ப. நாராயண அய்யரவர்கள் காட்டினர்கள்.

கள்ளிக்கோட்டை சபையார் வந்திருந்த அதிதிகளை நன்ருய் உபசரித்து நடத்தினர்கள். எல்லாம் திருப்தி கரமாய் நிறைவேறின. இந்திய தேசத்தின் புத்திரர், புத்திரிகளின் சங்கத்தைப் பற்றிய உபந்நியாசங்களும் நடந்தன.

2. ஷை Federation என்றமஹாசபையின்தமிழ்பத்திரிகை மாதம் ஒரு முறை அச்சு இயற்றிப்பிரசுரமாக வேண்டுமென்றும(1) ஷைமஹாசபையைச்சார்ந்தஅங்கத்தினர்ஒவ்வொருவரும், தம்முடைய வருஷ வரும்படியில் ரூபாய் ஒன்றுக்கு பயிசு ஒன்றுசெலுத்திவரவேண்டு மென்றும்(2) ஷை வருவாயால் மொத்தமாகும் பணம் சபையின் செலவுக்கும், சபையாரால் குறிப்பிடப்படும்தேசப் பொதுநன்மையான கைங்கரியத்துக்கும் உபயோகப்படுத்தப்படுமென்றும்.(3) வருகிற வருஷத்தில் இம்மஹாசபை கூடஊர்பழயபட்டணத்தில்கூடவேண்டுமென்றும் (4)தீர்மானங்கள் ஏற்பட்டன.

* * *

சென்ற எப்பிரல்மீ 22, 23-ம்தேதிகளில்தஞ்சாவூர் ஜில்லாவில் இருக்கின்ற பிர்ம்மஞானக்கிளைச் சபைகளின் ஒருமகாசங்கம் மன்னார்குடியில் கூடியது. அந்த சபையில் திருவனந்தபுரம் ஹைகோர்ட்டு பிரதமநியாயாதிபதியான சதாசிவஅய்யர் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். அநேக உபந்நியாஸங்கள் செய்யப்பெற்றன. அவைகளில் அக்கிராசனாதிபதி அவர்கள் உபந்நியாசமும், மகா-ள-ள-ஸ்ரீ ஹை கோர்ட்டு ஜட்ஜ் Sir. S. சுப்பிரமணியஅய்யர் அவர்கள் உபந்நியாசமும் முக்கியமானவைகள். Sir. S. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் தேக அசௌக்கியத்தினால் நேரில் வரவில்லை. உபந்நியாசத்தை அச்சுப்போட்டு அனுப்பிவிட்டார்கள். அது வாசிக்கப்பட்டது. ஷை சங்கமானது திருப்திகரமாய் நடைபெற்றது. ஷை ஊரிலிருக்கின்ற Town high School மானேஜரான மகா-ள-ள-ஸ்ரீ ராமதுரை அய்யர் அவர்கள் விருந்தினர்களை அழைத்து நல்வரவுப்பத்திரம் வாசித்தார்கள். வருகிற செப்டம்பர் மாதத்தில் ஷை சங்கமானது ஏனங்குடி கிராமத்தில் கூடும்.

* * * *

நாளிதுமேமீ 14,15ம் தேதிகளில் பங்களூரில் கன்னட பாஷை வழங்கும் நாடுகளிலுள்ள பிரஹ்மஞான கிளைச்சபைகளின் சங்கம் கூடப்பெறும். அப்போது மாது ஸ்ரீ. அனிபெஸன்ட்அம்மையார் அக்கிராசனம் வகிப்பார்கள்.

* * * *

நாளிது மேமீ 21, 22மீ உதிகளில் அடையாற்றில் பிர்ம்மஞானசபையின் உள்வகுப்பினரின் சங்கம் கூடும்.

* * *

வெண்தாமரை நாள். நாளிதுமேமீ 8உ இந்ததினம் பெருநாளாக, பிரஹ்மஞானசபைகள் இருக்கின்றஇடங்கள்தோறும் ஷைசபையின் அங்கத்தினர்களால் உலகமுழுமையும் கொண்டாடப்பெறும். 1125 கிளைச்சபைகள் பலதேசங்களில்உள்ளபட்டணங்களிலும் கிராமங்களிலும் இருக்கின்றன. இச்சபையை வெளியில் முன்னின்று ஸ்தாபித்த

## பூர்ண சந்திரோதய அநுபந்தம்.

### சபாசாரங்களின் சுருக்கம்

இருவர்களில், ஞானயோகினை, ஹெலிநாம்பாள் அம்மாள் 1891 மேமீ 8உ மரணமானார். அவரோ பரிசுத்தமான சாத்விகசுபாவமுள்ளவர். வெண்மை, சாத்விகத்தையும், சிவப்பு ராஜஸத்தையும் கறுப்பு தாமஸத்தையும் காட்டும். உத்தமரான ஒரு பெரியவரின் தேகவியோகமான நாளைக்குறிப்பிடும் பொருட்டு, அந்நாளுக்கு வெண்தாமரைநாள் என்ற பெயர் கொடுக்கலாயிற்று. இச்சபையின் முக்கிய நோக்கம் சமய வேற்றுமைகளினால் துவேஷம் கூடாதென்றும், பல சமயிகளுக்குள் சகோதர பாவம் பெருகிவரவேண்டுமென்றுமிருக்கின்றமையால், அந்நோக்கத்தை வெளிப்படையாகக் காட்டும் வண்ணம் அத்தினத்தில், பகவத்கீதை, தம்ம பதம் (என்ற பவுத்தநூல்) திருவாசகம், (சைவநூல்) பெரிய திருமொழி (வைஷ்ணவநூல்) Spiritual guide (ஞானவழி—என்ற, கிறீஸ்துமதநூல்) முதலிய கிரந்தங்களினின்று ஞானரசம் தோய்ந்த பாசுரங்கள் மதுரை பிரஹ்மஞான மந்திரத்தின் கண் இந்நாளில் வாசிக்கப்பட்டன. 700 ஏழைகளுக்குத் திருப்தியானபடி அன்னம் கொடுக்கப்பட்டது. மதுரை சபையில், ஷை படனங்கள் படிக்கப்படுமுன்னும் மற்ற காரியங்கள் ஆரம்பிக்கும் முன்னும், மதுரை பிரஹ்மஞான சபையின் அக்கிராசனாதிபதி, நம் தேசத்திற்கும், உலகத்திற்கும் நேர்ந்திருக்கிற விசனகரமான மரணமாகிய, சக்கரவர்த்தி (Edward) எட்வார்டு மஹாராஜா அவர்களின் மரணத்தைப் பற்றி மிகப் பரிதாபத்துடன் பிரஸ்தாபித்தார்:—சக்கரவர்த்தி அவர்களின் ஜீவாத்மாவின் புவர் லோகயாத்திரை சுகமாகவும், சீக்கிரமாகவும் நிகழவேண்டுமென, சற்சங்கற்பங்கள் கொஞ்சகாலம் சிந்திக்கும்படியாகக் கேட்டுக் கொண்டார்; அதன்மேல் கூடியிருந்த சபையார்கள் எல்லோரும் சொற்பகாலம், நிசப்தமாக மௌனம் ஸாதித்து, அவ்வண்ணம் சிந்தனை கொண்டார்கள்.

பத்திராதிபர்.

---

நாளிது மேமீ 8உ-யில் மதுரையில் வித்யாதர்ம பரிபாலன சபை என்று பெயருள்ள ஒரு சபை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் முக்கியமான கருத்துக்களாவன :—

I. ஏழைப்பையன்களுக்கு கல்வி கற்கிற விஷயத்தில் உதவி புரிதல்,

2. மதுரையில் உள்ளபள்ளிக்கூடங்களில், சமயமுறைகளைக் கற்பிக்கும்படியாக உபாத்தியாயர்களுக்கு சம்பளம் கொடுத்தல் முதலிய உதவிபுரிதல்;

3. மதுரையில் உள்ள பள்ளிக்கூடங்களுக்கு திரவிய சகாயம் தேடல்,

4. ஏழைகளுக்கு அன்னமிடல்.

5. இன்னும் சபையாரால் தீர்மானிக்கப்படும் நன்மையான காரியங்களைச் செய்தல்.

மகா-ா-ா-ஸ்ரீ சேஷாத்திரிஅய்யங்கார்அவர்கள், பிரஸிடெண்டு, டி. நாராயண அய்யர் அவர்கள் வைஸ்பிரஸிடெண்டு.

காலேஜ் உபாத்தியாயர் கிருஷ்ணஸ்வாமிஅய்யங்கார், அவர்கள் சிக்கிரிடேரி,

எம் கே. ராசகோபாலசாரியார காப்டன் ஜனரல், (Captain General.)

வ. ரெங்கசாமி அய்யர்—கஜானு

சபைக்கு வருவாய் (1) பிடி அரிசிக்கலயம் போட்டு வசூலித்தல் (2) சுபகாரியங்கள் நடக்கும் போதும், உத்ஸவாதிகள் நடக்கும் போதும், அவர் அவர்களால் இயன்ற மட்டில் திரவிய சகாயங்கள் செய்தல், (3) வியாபாரிகள் முதலியவர்கள் உண்டியல் பெட்டி வைத்து தினம் தினம் லாபத்தின்மீது, தர்மத்திற்கு சொற்பமாவது உபகரித்தல் (4) விவசாய அறுப்புக்காலங்களில், களத்தில் தானிய மூலமாக வசூலித்தல், (5) சபையில் அங்கத்தினராகச்சேருகிறவர்கள், மாசம் ஒன்றுக்கு 2-அணாவுக்குக்குறையாமல் சந்தாக்கொடு

த்தல், (6) பெரிய தனவான்களிடம் பணம் வசூலித்தல் முதலியவையாம்.

ஷெ சபையானது மேன் மேலும் அபிவிருத்தியாகி ஜனங்களுக்கு நன்மையை உண்டாக்கும்படி இறைவன் அருள்புரிவாராக.

* * *

தூமகேது அல்லது வால்நக்ஷத்திரம் சில நாட்களாக கிழக்கில் ராத்திரியில் 4 மணி முதற்கொண்டு அருணோதயம் வரையில் யாவராலும் பார்க்கப்பட்டு வருகின்றது. இது நாளிதுமீ 19உ சூரிய பிம்பத்தின் நேரே தோன்றி, அதைத்தாண்டுமென்று நக்ஷத்திர சாஸ்திரிகள் கணித்திருக்கிறார்கள். இந்த வால் நக்ஷத்திரதோற்றம் ராஜாவுக்குப் பீடையென்று சாதாரணமாய் வழங்குஞ்சொற்கு ஏற்ப, சக்கரவர்த்தி எட்வார்டு என்பவர்கள் மரணமாய்விட்டார்கள்.

எட்வார்ட் சக்கரவர்த்தி அவர்களின் மரணம்:—இந்த விசனகரமான சம்பவம் நாளிதுமீ 6உ வெள்ளிக்கிழமை ராத்திரி 11மணி 45நிமிஷத்தில் நேர்ந்தது. ஆங்கிலஅரசாட்சி உலகமுழுமையும் பரவித்தலைத்தோங்கிக்கொண்டு வருகிறது. நம் சக்கரவர்த்தி, இப்பாக்கியத்தை 1901-வரு ஜனவரி, பெற்று 9வரு 3மாசம் 14-நாள் அனுபவித்தார். உலக முழுமையுமுள்ள முடிமன்னர்களுக்குள், முக்கியமாக ஐரோப்பிய அரசர்களுக்குள், பெரிய போர்கள் நிகழாமல் இதுகாறும் இருந்தமைக்குக்காரணம், இம் மஹானுபாவருடையராஜதந்திர முயற்சியும் மேலானமனஊக்கமுமேயாம். பல ராஜாக்களிடம் தாமே நேரில் சென்று, யுத்தத்தினால்உலகத்தாருக்கு விளையும் கஷ்டங்களையும் கொடுமைகளையும் எடுத்துக் காட்டியும்வற்புறுத்திச் சொல்லியும், சமாதானம் உலகத்தில்நடைபெறும்படி செய்வித்தார். இம்மரணத்தால் உலகத்திற்கும், முக்கியமாக, ஆங்கில அரசாட்சிக்கும் நேரிட்டிருக்கிற நஷ்டமும் கஷ்டமும் இவ்வளவு என்று, இப்போது நினைக்கமுடியாது. இங்கிலாண்டில் பார்லிமேண்டு என்ற அரசாட்சி சபையில் பல கக்ஷிகள் ஏற்பட்டு பலவிதமான வாதங்கள் உண்டாகி பலமாகநடந்து வருகின்ற இச்சமயத்தில், சக்கரவர்த்தியின் மரணம் மிகவும் துக்ககரமாக இருக்கிறது. காலம் சென்ற

விக்டோரியா மஹாராணி அவர்கள் நம்தேசத்திற்கு எவ்விதம் தாய் போல் ஆதரவுள்ளவர்களாக இருந்தார்களோ, அவ்விதமே அந்த மாதுசிரோமணி உபதேசித்த நன்மொழிகளைச்சிரமேற்கொண்டு நம் எட்வார்மேஹாராஜா நம்தேசத்திற்கு அன்பும் ஆதரவுமுள்ளவராய் செங்கோல் செலுத்தி வந்தார்கள். "தாய்சொன்மிக்க வாசகமில்லை" என்ற பழமொழிக்கு, உலகமெங்கும்அறியும்படி, தக்கஉதாரணமாக தாம் ஒழுகிவந்தார். நம்தேசத்தில் தமிழ் நாட்டில் ஒருகோடி ஜனங்களுக்குமேல் இருக்கின்றார்கள், அவர்கள் யாவரும், ஆண், பெண் பாலர்கள் எல்லாரும், நம்சக்கரவர்த்தியின் ஆன்மா, இப்பூமி விட்டு புவர்லோகம் பிரவேசித்து, அந்தலோகசஞ்சாரம் அதிசீக்கிரமாகவும் இருக்கக்கடவது என்று, நல்லெண்ணங்கள் சிந்திப்பார்களாக. அவ்வான்மா அதிக சீக்கிரத்தில் சுவர்க்கலோகப்பிராப்தி அடையும்படி இறைவனை பிரார்த்திப்பார்களாக! அந்த லோகத்தில் ஆநந்தம் அநுபவிக்கிற காலம் சீக்கிரம் அணுகட்டுமென்று ஜனங்களின் பிரார்த்தனைகள் ஒருங்கு சேரட்டும். பின்பு இவ்வான்மா பரமபதம் பெறட்டும் என்று ஆசீர்வதிப்பார்களாக!

பத்திராதிபர்.

## நன்மொழிகள்.

1. நூதன சங்கற்பத்தை அப்பியசிக்கும் முன், அதைத் தெளிவாய் மனதில் பதித்துக்கொள். பின் அதை அநுஷ்டிப்பேன் என தீவிரமாய் தீர்மானம் கொள். கொண்ட பின் அதில் பயிலு. பயிலப்பயில தடைகள் வரும். அவைகளின் காரணம் இன்னதெனத் தெரிந்துகொள். பின்னர் அவைகளை மேற்கொள். அவைகளுக்கு இடங்கொடாதே. முயற்சி திருவினையாக்கும்.

2. பெரியோரின் அடையாளம் பண்பும் பணிவும்.

3. அவர் தீயவை கடிந்தார், நல்லவை நாடினர், தம்முயிர் ஓம்பார். பிறவுயிர் ஓம்புவர். இவர்தான் 'மனுஷன்' என்று பிறர்சொல்ல வாழ்ந்தார். இத்தன்மையாக உயிர் வாழ்க.

37

# பூர்ணசந்திரோதய விளம்பரம்.

———o———

| | | |
|---|---|---|
| பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் விலை | அணா | 6 |
| மனிதன் வம்சாவளியின் உண்மை | ,, | 8 |
| ஹிந்துமத தூஷணையின் பரிகாரம் | ,, | 4 |
| Avayar's Yoga Aphorisms in English | Price | 8 Annas. |

தபாற்கூலி பிரத்தியேகம்.

வேண்டுவோர் அடியிற்கண்டவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ப. நாராயண அய்யர்,
பிரசிடெண்டு, பிரஹ்மஞான சபை, மதுரை.

அல்லது

*Manager, Theosophist Office, Adayar, Madras. S.*

---

# திருக்குறள்.

## பரிமேலழகருரையுடன்

# பாக்கெட் சைஸ்.

புதிய பதிப்பு. உயர்ந்த கலிக்கோபயிண்டு.

அரிய பலசீர்திருத்தங்களுடன் அழகாக நல்ல கிளேஸ் காகிதத்தில்
அச்சிடப்பெற்றது. விலைரூ ஒன்று. (தபாற்கூலி வேறு.)

வேண்டுவோர்

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையில் பெறலாம்.

---

38

# அறிவிப்பு.

---

இப்பத்திரிகைக்கு வியாசங்கள் எழுதுகிறவர்கள் ஒரு பக்கத்தில் யாவருக்கும் பயன்படும்படி எளிய தமிழ்பாஷையில் சுருக்கமாக ஒரு பக்கத்தில் போதுமான மார்ஜின்விட்டு எழுதி அடியிற்கண்டவருக்கு அனுப்பும்படி பிரார்த்திக்கிறேன்.

---

## சந்தா விவரம்

வருஷ சந்தா தபாற்கூலியுடன் ரூ இரண்டுதான்.

தனிப்பிரதி விலை அணா 4.

---

## விளம்பர விகிதம்.

| ஒரு பக்கத்துக்கு. | | அரைப்பக்கத்துக்கு. | |
|---|---|---|---|
| மாசம் | ரூ 2—3—0 | மாசம் | ரூ 1—8—0 |
| 3 மாசத்திற்கு | ,, 6—0—0 | 3 மாசத்திற்கு | ,, 3—8—0 |
| 6 ௸ | ,, 11—0—0 | 6 மாசத்திற்கு | ,, 6—0—0 |
| 1 வருஷத்துக்கு | ,, 18—0—0 | 1 வருஷத்துக்கு | ,, 10—0—0 |

சந்தா முதலிய யாவும் அடியிற்கண்டவருக்கு அனுப்பவேண்டும்.

ப. நாராயண அய்யர்,

பத்திராதிபர்,

பெருமாள் தெப்பக்குளத்தெரு, மதுரை.

---